


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 187 18.02.2026 புதன்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 187 | Wednesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

புதன்கிழமை
(18–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–6
பிறை: வளர்பிறை
திதி
பிரதமை இரவு 6.06 வரை
பிறகு துவிதியை
நட்சத்திரம்:
சதயம் இரவு 10.23 வரை
பிறகு பூரட்டாதி
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | மகிழ்ச்சி |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | உயர்வு |
| கடகம் | செலவு |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | அன்பு |
| துலாம் | ஊக்கம் |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | மகிழ்ச்சி |
| மகரம் | முயற்சி |
| கும்பம் | ஆக்கம் |
| மீனம் | சிந்தனை |

## இடைக்கால பட்ஜெட்: சட்டசபையில் "காதுகுத்தும் விழா" என விமர்சித்து அ.தி.மு.க. அழைப்பு



**சென்னை,பிப்.18:**

2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை இன்று (செவ்வாய்கிழமை) மீண்டும் கூட இருக்கிறது. காலை 9.30 மணிக்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்து வருகிறார். வழக்கம்போல இந்த முறையும் காகிதம் இல்லா பட்ஜெட்டாகவே தாக்கல் செய்யப்படுகிறது.




இதே நிதியாண்டுக்கான முன்பண மானிய கோரிக்கை மற்றும் 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) ஆகியவை வருகிற 20-ந் தேதி அவைக்கு அளிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் பட்ஜெட் என்ற பெயரில் தமிழக அரசு மக்களுக்கு காது குத்துவதாக அ.தி.மு.க. விமர்சனம் செய்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்படுள்ள அழைப்பிதழில் கூறியிருப்பதாவது:-

கடந்த நாலரை ஆண்டுகளாக பட்ஜெட் என்னும் பெயரில் தமிழ்நாடு மக்களுக்கு நடத்தப்படும் மாபெரும் காது குத்தும் விழா இந்த வருடமும் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2026-27 தமிழ்நாடு வெல்லட்டும்

## 2026–2027–ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்

# செயற்கை நுண்ணறிவு, தமிழ் மொழி வளர்ச்சி : நிதியமைச்சர் வெளியிட்ட முக்கிய தகவல்கள்

**சென்னை,பிப்.18:**

2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை நேற்று (செவ்வாய்கிழமை) மீண்டும் கூடியது. காலை 9.30 மணிக்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார். வழக்கம்போல இந்த முறையும் காகிதம் இல்லா பட்ஜெட்டாகவே தாக்கல் செய்யப்பட்டது.

இதே நிதியாண்டுக்கான முன்பண மானிய கோரிக்கை மற்றும் 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) ஆகியவை வருகிற 20-ந் தேதி அவைக்கு அளிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் பட்ஜெட் உரையின்போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. நாடுபோற்றும் நல்ல திட்டங்களை தந்தவர் முதலமைச்சர்

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடையும் வகையில் 5 ஆண்டுகளில் சிறந்த திட்டங்கள் நிறைவேற்றம்.

தமிழ்நாட்டில் வறுமையை ஒழிக்கும் இறுதிப்போரை தொடங்கி உள்ளோம்.

பன்னாட்டுத் தனித் தமிழ் கருத்தரங்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

கீழடி, பொருநை அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டு மக்களின் வரவேற்பை பெற்றுள்ளன.

புதிய அருங்காட்சியகங்கள் அமைப்பதற்காக ரூ.285 கோடி ஒதுக்கீடு.

அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்ய நீர் வளம் பெருக்கி உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனையை செய்துள்ளோம்.

உலகை வெல்லும் இளைஞர்களை உருவாக்கிட நாம் வடிவமைத்த திட்டங்கள் அனைத்தும் வெற்றி.

மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை உள்ளிட்ட சவால்களுடன் பயணம்.

தமிழக அரசின் திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன.

வரவு செலவு திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதை கலைஞர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

தமிழ்தாய் வாழ்த்தை மாநில பாடலமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு ரூ.630 கோடியில் 10,469 வீடுகள்.

தமிழக அரசின் முத்திரை திட்டங்களில் முதன்மையானது மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் வங்கிக் கணக்கில் 3 மாத தொகை ரூ.3000, கோடை கால சிறப்புத் தொகை ரூ.2000 என ரூ.5000 வரவு வைக்கப்பட்டது.

விடியல் பயணம் திட்டம் மூலம் 881 கோடி முறை மகளிர் பாதுகாப்பாக பயணம் மேற்கொண்டுள்ளனர்.

கைம்பெண்களின் கண்ணிய வாழ்வை உறுதி செய்திட நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு லட்சத்திற்கு 35 என்ற அளவில் உள்ளது.

பெண் ஓதுவார் நியமனம் தமிழக அரசின் மகத்தான சாதனை.

6 லட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.40 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 19 தோழி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழ்நாட்டு பெண்கள்.

ஏழை எளிய தாய்மார்களின் துயரை துடைக்கும் வகையில் காலை சிற்றுண்டித் திட்டம். ரூ.1884 கோடியில் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் நடைமுறையில் உள்ளது.

25 இடங்களில் மூத்த குடிமைக்களுக்காக அன்பு சோலை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பெண்கள் பெயரில் சொத்துக்களை பதிவு செய்வதற்கான கட்டணத்தில் 1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடு, பணி உயர்விலும் இட ஒதுக்கீடு.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ரூ.1,471 கோடி ஒதுக்கீடு.

அனைத்து சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கும் ரூ.5,463 கோடி நிதி ஒதுக்கீடு.

பள்ளிக்கல்வித்துறைக்கு ரூ.48,534 கோடி நிதி ஒதுக்கப்படுவதாக இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்பு.

கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,171 கோடி மதிப்பீட்டில் மடிக்கணிகள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம், கோவை, நெல்லை அரசு பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் அமைக்க நடவடிக்கை.

உயர்கல்வித்துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் ரூ.8,505 கோடி ஒதுக்கீடு

சிறப்புத் தட்ட செயலாக்கத் துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் ரூ.17,088 கோடி ஒதுக்கீடு.

இளைஞர் நலன், விளையாட்டுத் துறைக்கு ரூ.718 கோடி நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டிற்கு பதக்கம் பெற்றுத் தந்த 5403 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.176 கோடி பரிசு.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கூடுதலாக ஒரு லட்சம் வீடுகள் கட்டப்பட்டுகின்றன

1.14 லட்சம் வீடுகள் ரூ.969 கோடி செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 20,484 கி.மீ. சாலைகள் மேம்பாடு.

ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ.28,687 கோடி நிதி ஒதுக்கீடு



செய்யப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 87 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நகராட்சி நிர்வாகத்துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் ரூ.28,227 கோடி ஒதுக்கீடு.

வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.6,045 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள்.

தொழிலாளர் நலத்துறைக்கு ரூ.1,996 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காவிரி, வைகை ஆறுகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு பூங்காக்கள் அமைக்க ரூ.374 கோடி ஒதுக்கீடு.

மருத்துவத்துறைக்கு ரூ.22,090 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12.3 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

40 புதிய அரசு தொழில் பயிற்சி நிலையம் அமைக்க ரூ.291 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பட்டாசு தொழிலாளர்கள் உயிரிழந்தால் அவர்களின் குழந்தைகளுக்கு 18 வயது நிறைவடையும் வரை உதவித்தொகை தரப்படுகிறது.

திருச்சி, மதுரை, ஓசூரில் ரூ.1070 கோடி மதிப்பீட்டில் புதிய டைடல் பூங்காக்கள்.

தொழில் முதலீடு ஊக்குவிப்புத் துறைக்கு ரூ.4,882 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 5 ஆண்டுகளில் ரூ.10.70 லட்சம் கோடி கடன்.

கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் ரூ.405 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு செமி கண்டக்டர் திட்டத்திற்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இடைக்கால பட்ஜெட்டில் சிறு, குறு நடுத்தர தொழில் துறைக்கு ரூ.1943 கோடி நிதி ஒதுக்கீடு.

கோவை மாவட்டத்தில் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்க நகை பூங்கா பணிகள் நடைபெற்று வருகிறது.

இடைக்கால பட்ஜெட்டில் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ரூ.819 கோடி நிதி ஒதுக்கீடு

தொழில் முதலீடு, வர்த்தகத்துறைக்கு ரூ.4882 கோடி ஒதுக்கீடு.

மக்கள் நல்வாழ்வு துறைக்கு ரூ.22,090 கோடி ஒதுக்கீடு.

நீர்வளத்துறைக்கு ரூ.10,076 கோடி ஒதுக்கீடு

எரிசக்தித்துறைக்கு ரூ.18,301 கோடி ஒதுக்கீடு

5 ஆண்டுகளில் ரூ.6121 கோடியில் ரூ.12,087 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழக அரசின் போக்குவரத்து துறைக்கு ரூ.13,062 கோடி நிதி ஒதுக்கீடு

12 ஆயிரம் புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5 ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக்கழகத்தின் 3,673 பேருந்துகள் ரூ.361 கோடியில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

புதிய சிற்றுந்து திட்டத்தின் மூலம் 6303 வழித்தடங்களில் சிற்றுந்து சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்கு 4000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

1,168 தரைப்பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக மாற்றப்பட்டு உள்ளது

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தில் ரூ.160 கோடியில் 385 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டில் கால்நடை பராமரிப்பு துறைக்கு ரூ.4,435 கோடி நிதி ஒதுக்கீடு.



மீன்பிடித் தடைக்காலத்தில் வழங்கப்படும் தொகை ரூ.8000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பால் பண்ணைகள் நவீனமயமாக்கலுக்காக ரூ.758 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இடைக்கால பட்ஜெட்டில் கைத்தறி, கதர் துறைக்கு ரூ.1,943 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால பட்ஜெட்டில் வீட்டுவசதி, நகர்ப்புறத்துறைக்கு ரூ.7,547 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறைக்கு ரூ.1,694 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கு ரூ.11,000 கோடி நிதி ஒதுக்கீடு

அரசு பணியில் இருப்பவர் விபத்தில் உயிரிழக்கும் பட்சத்தில் ரூ.1 கோடி

கடந்த 5 ஆண்டுகளில் 17318 பேர் புதிதாக காவல்துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உள்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறைக்கு ரூ.17,111 கோடி ஒதுக்கீடு

ரூ.50 ஆயிரம் கோடி மத்திய அரசிடம் நிதி கோரிய போதிலும் ரூ.1151 கோடி மட்டுமே கொடுத்தது.

வறட்சி தடுப்பு நடவடிக்கைக்கு ரூ.110 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு சுமார் ரூ.15,000 கோடி இழப்பீட்டு நிதி தர நிபந்தனை

ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்திற்கு ரூ.3548 கோடி, ஜல்ஜீவன் திட்டத்திற்கு ரூ.3112 கோடி நிலுவை.

மத்திய அரசு தர வேண்டிய ரூ.9500 கோடி நிலுவைக் கடனில் தொடர்ந்து இருந்து வருகிறது.

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டை 2 மணி நேரம் 22 நிமிடங்கள் இடைவிடாமல் தாக்கல் செய்து தனது உரையை நிறைவு செய்தார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

### செய்த நிலையில் வேளாண் பட்ஜெட்டை எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

58 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

உழவர்களுக்கு 53 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

10,588 சிறு பாசன குளம், ஊரணி, கால்வாய் தூர்வாரி மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல் ஜெயராமன் திட்டத்தில் 900 மெ.டன் பாரம்பரிய நெல் விதைகள் விநியோகம்.

70 ஆயிரம் விவசாயிகளுக்கு நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மரங்களை வெட்டி எடுத்துச்செல்லும் விதிகளை தளர்த்தும் வகையில் புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்படும்.

2025-26-ம் ஆண்டில் 12.45 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் இளைஞர்களை தொழில் முனைவோராக்க ரூ.4.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க ரூ.229 கோடி ஒதுக்கீடு.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கம்பு சாகுபடி பரப்பளவு 1.33 லட்சம் ஏக்கராக அதிகரிப்பு.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மூலம் 12.84 லட்சம் விவசாயிகள் ரூ.175 கோடி நிதி பெற்றுள்ளனர்.

துவரை சாகுபடி விரிவாகக் இயக்கம் மூலம் ரூ.66 கோடியில் 2.55 லட்சம் ஏக்கரில் சாகுபடி.

496 பட்டதாரி இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

4150 சூரிய சக்மி பம்பு செட்கள் வாங்க 83 கோடி ரூபாய் மானியம்

1320 வேளாண் இயந்திர வாடகை நிலையங்கள் அமைப்பு

10 லட்சத்தில் இருந்து 12 லட்சமாக மக்காச்சோள சாகுபடி பரப்பு அதிகரிப்பு

மிளகாய், ஏலக்காய், சாதிக்காய் சாகுபடி 22,950 ஏக்கரில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

8400 ஏக்கரில் முந்திரி உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு ரூ.12 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தக்காளி, வெண்டை, கத்திரிக்காய் சாகுபடி பரப்பளவை 1 லட்சம் ஏக்கரில் விரிவாக்கம் செய்ய 1.68 லட்சம் விவசாயிகளுக்கு மானியம்

5 ஆயிரம் புதிய பம்பு செட்கள் 7 கோடி ரூபாயில் வழங்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரியில் புதிதாக தோட்டக்கலை கல்லூரி திறக்கப்பட்டுள்ளது.

நாகை, சிவகங்கை, கரூரில் புதிதாக அரசு வேளாண் கல்லூரிகள் திறப்பு.

30 ஆயிரம் நபர்களுக்கு தேனீ வளர்ப்பு மதிப்பு கூட்டு இயந்திரங்களை இயக்குதல் பயிற்சி.

150 விவசாயிகள் அயல் நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பயிர்க்கடன் உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்காக வட்டி மானியம் ரூ.3,002 கோடி வழங்கல்.


5 ஆண்டுகளில் அரசு மீன் பண்ணைகள் மூலம் 48 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி

பால் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்தொகைக்காக 730 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் ஆடு, பன்றி, கோழி வளர்ப்பு பண்ணை சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட்டில் வேளாண்மைத்துறைக்கு ரூ.47,248 கோடி நிதி ஒதுக்கீடு.

## ரூபாய் நோட்டு மாலையுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்த செங்குளம் இசக்கியம்மன்



திருநெல்வேலி மாவட்டம் சேரன் மகாதேவி வட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் கபாலிபாறை கிராமம் செங்குளம் இசக்கியம்மன் ஆலயத்தில் எட்டாம் பூஜை விழாவின் போது ரூபாய் நோட்டு மாலையுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்த செங்குளம் இசக்கியம்மன்.


**அரும்பூர். க. குமாரகுரு, மயிலாடுதுறை.**

## மாசி மாத அமாவாசை கண்ணாடி அறை சேவை



திருவள்ளூர் ஸ்ரீவைத்திய வீரராகவ பெருமாள் மாசி மாத அமாவாசை கண்ணாடி அறை சேவை 17.02.2026

## திருவோணம் சுவாமி புறப்பாடு



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (16.02.2026) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி ஆஸ்தான புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

### மண்டபம் அருகே

# கிண்டர்கார்டன் பள்ளி மழலையருக்கு பட்டமளிப்பு விழா



**மண்டபம், பிப்.18:** ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசை நொச்சியூரணி டாக்டர் இளையராஜா குளோபல் அகாடமி சிபிஎஸ்இ., பள்ளி 7-ஆம் ஆண்டு விழா மற்றும் கிண்டர்கார்டன் மழலையருக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

டாக்டர் இளையராஜா எஜுகேஷன், ஹெல்த் சர்வீஸஸ் டிரஸ்ட் நிறுவனர் டாக்டர் கே. இளையராஜா தலைமை வகித்தார். டாக்டர். இளையராஜா குளோபல் அகாடமி செயலரும், டாக்டர் இளையராஜா எஜுகேஷன் & ஹெல்த் சர்வீஸஸ் டிரஸ்ட் தலைமை நிர்வாக அதிகாரியுமான டி.மணிகண்டராஜா முன்னிலை வகித்தனர்.

டாக்டர். இளையராஜா குளோபல் அகாடமி பள்ளித் தலைவர் டாக்டர் ஆர். சகானா, டாக்டர். இளையராஜா குளோபல் அகாடமி பள்ளி முதல்வர் எம்.சைலஜா ஆனந்தி ஆகியோர் குத்து விளக்கேற்றினர்.

கிண்டர்கார்டன் குழந்தைகளுக்கு கீழக்கரை காவல் உதவி கண்காணிப்பாளர் குணாள் உத்தம் ஷ்ரோதே, பட்டம் வழங்கினார். பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவ, மாணவியருக்கு மண்டபம் பேரூர் மன்ற துணைத்தலைவர் நம்புராஜன், ராமேஸ்வரம் கராத்தே பழனிச்சாமி, அதிமுக., தகவல் தொழில் நுட்ப விருதுநகர் மண்டலச் செயலர் சரவணன், மண்டபம் கிழக்கு ஒன்றிய அதிமுக., செயலர் ஜானகி ராமன், பேரூர் மன்ற முன்னாள் உறுப்பினர் பாலசுப்ரமணியன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் சீனி அரசு, கலா உடையார், சுலைமான் உள்ளிட்டோர் பரிசு வழங்கினர்.

விழாவில் டாக்டர். இளையராஜா குளோபல் அகாடமி பள்ளி முதுநிலை முதல்வர் பி.விஜயலட்சுமி சமீபத்தில் உடல்நல குறைவால் காலமானார் அவருக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் காவல் சார்பு ஆய்வாளர்கள் தில்லைராஜன், சக்திவேல், மீனவர் சங்க நிர்வாகிகள் ஜாகிர் உசேன், செய்யது சுல்தான் உள்பட பலர் பங்கேற்றனர். மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# சீர்காழி சுபம் வித்யா மந்திர் பள்ளியில் கிரிக்கெட் போட்டி



**சீர்காழி , பிப் , 18 :** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சுபம் வித்யா மந்திர் பள்ளியில் ஏழு பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி செயற்கை புல்வெளி அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு சுபம் கல்வி நிறுவனங்களின் தலைவர் கியான் சந்த் மற்றும் பள்ளி முதல்வர் தாளாளர் சுதேஷ் முன்னிலை வகித்தனர்.

போட்டியினை ஜெயின் யுவ மண்டல் தலைவரும், பாரதிய ஜெயின் சங்க சீர்காழி பிரிவு தலைவருமான விகாஸ் கலந்து கொண்டு துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவர் ஆனந்த் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களை பாராட்டி பரிசுகள் வழங்கிய கௌரவித்தார்.

இப்போட்டியில் கொள்ளிடம் ஃபீனிக்ஸ் கிரிக்கெட் அகெடமி முதலிடத்தையும் சீர்காழி சுபம் வித்யா மந்திர் பள்ளி இரண்டாம் இடத்தையும் சீர்காழி குட் சமாரிடன் பப்ளிக் பள்ளி மூன்றாம் இடத்தையும், மயிலாடுதுறை அழகு ஜோதி அகெடமி நான்காம் இடத்தையும் பெற்று வெற்றி வாகை சூடினர்.

இதில் சீர்காழி மற்றும் மயிலாடுதுறை பகுதியை சேர்ந்த 14 பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்த விருந்தினர்களை பள்ளி முதல்வர் வித்யா வரவேற்றிட முடிவில் ஆசிரியர் கிறிஸ்டோபர் நன்றி கூறினார். ஏராளமான பெற்றோர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# தேவகோட்டை அரசு முழுநேரக் கிளை நூலகத்தில் இரு தமிழாசிரியர்களின் கதை, கவிதை நூல்கள் வெளியீடு



**தேவகோட்டை,பிப்.18:** தேவகோட்டை, தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகவும், வாசிப்பு இயக்கச் செயலாளராகவும் பணியாற்றும் முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ் அவர்களின் ஒன்பதாவது நூலான 'நிற்க..கற்க!' (கல்வியும் கல்விசார் கதைக்களனும்) என்னும் சிறுகதை நூலும், அரியக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கவிஞர் துஷ்யந்த் சரவணராஜ் அவர்களின் பதிமூன்றாவது கவிதைத் தொகுப்பாகிய 'மகள் கையளித்த மயிற்பீலிகள்' நூலும் தேவகோட்டை, அரசு முழுநேரக் கிளை நூலகத்தில் வெளியிடப்பெற்றது.

செல்வி ஜ.அட்சயா, செல்வி ஜ.அதிசயா தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். வாசகர் வட்டத் தலைவர், முன்னாள் இராணுவ வீரர் பி.பிரான்சிஸ் சேவியர் வரவேற்றார்.

முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அவர்களின் நன்மதிப்பைப்பெற்றவரான நல்லாசிரியர் சேவியர் ராஜப்பா தலைமை வகித்தார். பாரதி கலை இலக்கியப் பெருமன்றச் செயலர் புலவர் ம.சவரிமுத்து நூல்களை வெளியிட்டார்.

வாசகர் வட்டச் செயலாளரும் கிளை நூலகருமாகிய வி.சூரசங்கரன், தலைவர் பி.பிரான்சிஸ் சேவியர், பொருளாளர் ப.ஜெகந்நாதன், துணைத்தலைவர் திருமதி அக்சீலியா குணசீலன், இணைச்செயலாளர் முனைவர் அ.மைக்கேல் குருஸ், ஆசிரியர் நா.மங்களேஸ்வரி, அரசு விடுதிக் காப்பாளர் கவிஞர் அ.சந்திரன், எழுத்தாளர் மு.ஜோதி சுந்தரேசன், கவிஞர் துஷ்யந்த் சரவணராஜ், உதவிப்பேராசிரியர் மணிகண்டன், கவிஞர் நா.மைதீன், யோகா ஆசிரியர்கள் இரா.பஞ்சவர்ணம், பாலசுப்பிரமணியன், ஆசிரியர் இரா.நித்யா, மாணவர்கள் சூ.ஸ்ரீசக்தி லிங்கேஸ்வரா, பா.யோகன்யா தேவி ஆகிய பதினாறு பேரும் 'நிற்க..கற்க!' நூலின் பதினாறு கதைகளையும் ஆளுக்கொரு கதைத்தலைப்பில் திறனாய்வுரை நிகழ்த்தினர்.

வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர், எழுத்தாளர் ஜோல்னா ஜவஹர் அவர்கள் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கி 'மகள் கையளித்த மயிற்பீலிகள்' கவிதைநூல் குறித்து மதிப்புரையாற்றினார்.

KMS சிந்தனைச்சோலை நிறுவனர் சு.தெய்வசிகாமணி, தலைவர் கவிஞர் பேராசிரியர் ச.ஆறுமுகம் தேவகோட்டை, வ.உ.சி பேரவைத் தலைவர் ராம்.சிவ.தில்லை ராஜா, பட்டிமன்றப் பேச்சாளர்,நூலகர் ராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர்கள் சார்பில் 'நிற்க..கற்க!' சிறுகதை நூலாசிரியர், முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ் ஏற்புரையாற்றினார். துணைத்தலைவர் அ.சுப்ரமணியன் நன்றி கூறினார்.


வாசகர் வட்ட வழிகாட்டுதல் குழு உறுப்பினர் வீ.முருகப்பன், செயற்குழு உறுப்பினர் மு.சரவணன், CPI நகரச் செயலாளர் காமராஜ், AITUC மாநில துணைத் தலைவர் மீனாள் சேதுராமன், நல்லாசிரியர் ராமசாமி, கவிஞர் முத்துராமலிங்கம், ஆசிரியர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். எண்ணமும் எழுத்தும் நூலின் மாணவ எழுத்தாளர்கள் ஐம்பது பேரும் விழா நிகழ்வில் பாராட்டு பெற்றனர்.

## ஸ்ரீவியூக சுந்தரராஜ பெருமாள் மாசி திருவோணம்



மதுரை அருள்மிகு ஸ்ரீ மதுரவல்லி தாயார் உடனுறை அருள்மிகு கூடலழகர் பெருமாள் திருக்கோயில் ஸ்ரீவியூக சுந்தரராஜ பெருமாள் மாசி திருவோணம். ஆடி வீதியுலா.

# பொட்டலூரணியில் நடமாடும் டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம் மூலம் காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம்



**தூத்துக்குடி,பிப்.18:** தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் டி.வி.எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை இணைந்து நடத்தும் நடமாடும் டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம் மூலம் காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம் (17.02.2026) இன்று பொட்டலூரணியில் வைத்து நடைபெற்றது.

முகாமினை மக்களை தேடி மருத்துவம் சுகாதார ஆய்வாளர் திரு.மு.முத்துகுமார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

டி.வி.எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை கிராம வளர்ச்சி அலுவலர் திரு.ஆ.கணேசன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

முதுநிலை காசநோய் ஆய்வுக்கூட மேற்பார்வையாளர் திரு.ச.இசக்கி மஹாராஜன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இம்முகாமில் 40 நபர்களுக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. 10 நபர்களுக்கு சளி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வல்லநாடு காசநோய் பிரிவு முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் திரு.அ.அப்துல் ரஹீம் ஹீரா அவர்கள் நன்றி கூறினார்.

இம்முகாமில் எக்ஸ்ரே நுட்பனர்கள் திருமதி.ச.கிருஷ்டி, திரு.நே.கிறிஸ்டின் குமாரதாஸ், சுகாதார பார்வையாளர் திருமதி.ந.முத்து லட்சுமி, சுகாதார தன்னார்வலர் திருமதி.ச.வண்டிமலைச்சி, திரு. முத்துவேல் சுகாதாரத்துறை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் டி.வி. எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை ஆகியோர்கள் இணைந்து செய்திருந்தார்கள்.

## இடைக்கால பட்ஜெட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.718 கோடி ஒதுக்கீடு,



**சென்னை, பிப்.18:** சட்டசபையில் தமிழ்நாடு அரசின் 2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் உள்ள அம்சங்கள் வருமாறு:-

* டாக்டர் கலைஞர் விளையாட்டுத் தொகுப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 12,525 கிராம ஊராட்சிகளுக்கு 16,798 விளையாட்டுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

* 4,226 விளையாட்டு வீரர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளத் தேவையான விளையாட்டுக் கருவிகளைத் தமிழ்நாடு வாகையர் அறக்கட்டளை வழங்கி உள்ளது.

* தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த 5,403 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.176 கோடி இதுவரை வழங்கப்பட்டு உள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு 101 கோடி ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

* மாநில அளவில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா-இது நம்ம ஆட்டம் 2026 போட்டிகளை நடத்திட 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* நாடே வியக்கும் வண்ணம் கடந்த 2022-ம் ஆண்டில் நடத்தப்பட்ட செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் முதல் இளையோருக்கான உலகக் கோப்பை ஆக்கி போட்டிகள் வரை பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் சிறப்புற நடத்தப்பட்டதைப் பாராட்டும் விதமாக, இந்தியத் தொழில் துறைக் கூட்டமைப்பின் விளையாட்டு விருதை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கடந்த 2023 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் வென்றெடுத்துள்ளது.

* விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் எனும் விருது உள்ளிட்ட மேலும் பல விருதுகளையும் தமிழ்நாடு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.718 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹ 999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certified
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

# கவிதை அரங்கம்!






சாதிக்கும் எண்ணம்
ஆழ்மனதில் தோன்றி
விட்டால் எது இருந்தாலும்
இல்லை என்றாலும்
சாதிக்க முடியும் உன்
விடா முயற்சியால்

கவலைகள் வந்து
கொண்டு தான்
இருக்கும் அதனை
நிரந்தரமாக்குவதும்
தற்காலிகமாக்குவதும்
நம்மிடம் தான் உள்ளது

ஒவ்வொரு வெற்றியும்
ஒரு பரிசு
ஒவ்வொரு தோல்வியும்
ஒரு பாடம்
ஒவ்வொரு நாளும்
ஒரு புதிய வாய்ப்பு

வெற்றிகளை விதி எனும்
கதவு தடுத்தாலும்
தன்னம்பிக்கை எனும்
சாவி கொண்டு திறந்திடு

# வாழ்க்கை தத்துவம்...



காத்திருக்கும் நேரம்
நீள்ந்தால்
கிடைக்கும் பலன்
பெரிதாக இருக்கும்

ஒவ்வொரு தோல்வியும்
அடுத்த வெற்றிக்கான படிக்கல்லே

வாழ்வில் சந்திக்கும் மனிதர்கள்
பாதை காட்டுவார்கள்
ஆனால் பாதையை
தேர்வு செய்வது நாம்தான்

சிரிப்பால் தொடங்கும் நாள்
சுமைகளை சிறிதாக்கிவிடும்

சிரிக்கத் தெரிந்தவன் தான்
வாழ்க்கையை
வெல்லத் தெரிந்தவன்

# துணை தேடல்

நீலமேகம் வந்தபோது வன்மீகநாதன் மட்டும்தான், காந்திமதியின் அருகில் அமர்ந்திருந்தார். தலைமாட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கண்கள் சுருங்கி காதுகள் விடைத்து; கன்னங்கள் இறுக மௌனமாக அழுவது நன்றாகவே தெரிந்தது.என்ன பேசுவது என்று தெரியாமல் உதிர்த்த ' நாதா' என்ற ஒற்றைச் சொல் வன்மீகநாதனை உலுக்கியது. 'நீலூ! என்னடா இப்படி ஆயிடுத்தே. நன்றாகத்தானே இருந்தா! டி.வி யில் சஞ்சய் சுப்பிரமணியம் கச்சேரி கேட்டுண்டடே ஃபோனை பார்த்துண்டு இருந்தா. அப்படியே சரிஞ்சுட்டா. டாக்டருக்கும் உனக்கும் தாண்டா ஃபோன் பண்ணினேன். எனக்குத் தெரிஞ்சுடுத்து. டாக்டரால் என்ன பண்ண முடியும்?' என்று சொல்லி மனம் உடைந்து கதறி அழுதார். டாக்டர் வந்து பார்த்துவிட்டு' லுக்ஸ் லைக் மேஸிவ் ஹார்ட் அட்டாக்' எனக் கூறிவிட்டு நகர்ந்தார். நீலமேகம் மற்ற ஏற்பாடுகளை கவனிக்கலானார். அவருடைய பெண் சுமதிக்கும், பிள்ளை மகேந்திரனுக்கு,ம் தகவல் சொல்லிய பிறகு நாதனின் உறவுக்காரர்களுக்கு அவர் ஃபோனிலிருந்தே தகவல் சொன்னார். நாதன் சொல்லியபடி , ஐயருக்கும் தகவல் சொல்லி; அவரும் வந்து சேர்ந்த பின் கூட,நாதனோடு உட்கார்ந்து ஆறுதல் சொல்ல நேரமில்லையே; என்று நினைத்துக் கொண்டார். உற்றாரும் உறவினரும் ஒவ்வொருவராக வந்தனர். திருச்சி யிலிருந்து அவர் தம்பி பஞ்சாபகேசன் வந்து சேர்ந்தது அவருக்கு ஆறுதலாக இருந்தது. நாதனின் வீட்டு வழக்கப்படி மேலே ஆகவேண்டிய காரியங்களை பஞ்சாபகேசன் செய்யலானார். பெங்களூரிலிருந்தும் மும்பையிலிருந்தும் சுமதியும் மகேசனும் விமானத்தில் புறப்பட்டு விட்டதாக பஞ்சாபகேசன் சொல்ல; நீலமேகத்திற்கு நாதன் பக்கத்தில் உட்கார அவகாசம் கிடைத்தது. துவண்டு போயிருந்த நாதனுக்கு 'சட் ' என் முதுமை கூடிவிட்டது போல் இருந்தது. ' கேனிலிருந்து காஃபியை கொண்டு வந்து கொடுத்தவர்' சுகர் இறங்கிடும். அப்புறம் உன்னை யார் பார்ப்பது? நாளைக்கு ரொம்ப டென்ஷனான நாள். யாரிடமும் ரொம்ப பேசாதே' என்று சொல்லியவர்,சற்று நேரத்தில் அவரை வற்புறுத்தி, தன் வீட்டிலிருந்து கொண்டு வந்த இரண்டு ரொட்டி துண்டுகளை கொடுத்து, அவருடைய வழக்கமான மருந்துகளைச் சாப்பிட வைத்தார். நீலு, நாதன் பக்கத்தை விட்டு எங்கும் நகரவில்லை. காலையில் அவர் குழந்தைகள் வந்து விட, காந்திமதியின் இறுதிச் சடங்குகள் செவ்வனே நிறைவேறியது.


தினம் நீலமேகம் அவரை வந்து பார்த்துவிட்டுச் சென்றார். நாதன் வீட்டார் வழக்கப்படி பதினைந்தாம் நாள் காரியம் முடிந்து உறவினர்கள் அவரவர் இல்லம் திரும்ப, சுமதியும் மகேசனும் அப்பாவை தங்களுடன் அழைத்துப் போவதில், முனைப்பாக இருக்க, நாதன் 'வங்கி வேலைகள் பென்ஷன் வேலைகள் இருப்பதால், நாலைந்து மாதம் கழித்து அது பற்றி யோசிக்கலாம்' என்று நேரம் எடுத்துக் கொண்டார். குழந்தைகளும் புரிந்து கொள்ள நீலமேகத்தின் பாதுகாப்பில் அவரை இப்போதைக்கு விட்டு விட்டு, சமையல் மற்றும் மேல் வேலைகளுக்கு உதவியாளர்களை ஏற்பாடு செய்துவிட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

காந்திமதி போய் ஒரு மாதம் ஆயிருக்கும். வங்கி வேலைகளுக்கும், பென்ஷன் வேலைகளுக்கும் நீலமேகம் நாதன் கூடவே அலைந்தில்,கிட்டத்தட்ட வேலைகள் யாவும் முடிந்து விட்டன.

ஒரு நாள் மாலை இருவரும் வழக்கம்போல் கோயில் பிரகாரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கும்போது' நீலு! எனக்காவது குழந்தைகள் இருக்கிறார்கள். உனக்கு குழந்தை கூட இல்லை.. உனது நாற்பத்தெட்டு வயசிலேயே சுந்தரி போனபின் தனியாகத் தானே இருக்கிறாயே! எப்படி உன்னால் இருக்க முடிகிறது? காந்தி இல்லாமல் இந்த ஒரு மாசம் போனதே எனக்கு ஒரு யுகம் போல் இருக்கிறது. எப்படித்தான் நீ இத்தனை வருடமும் வளைய வந்தாயோ? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது ' என்றார்; 'நாதன்.நான் எங்கே தனியா இருந்தேன்? இரண்டு வருடம் முன்பு வரை வேலைக்குப் போய் கொண்டுதானே இருந்தேன். சாயங்காலம் உன் வீட்டுக்கு வந்துவிடுவேன். கோயிலுக்குச் சேர்ந்தே போவோம்; தினம் தினம் இரவு தூங்கும் வரை ஏதாவது பேசிக்கொண்டிருப்போம்;இல்லையா? நமக்கு ஒன்று 'இல்லை' என்று ஆன பின் அதைப்பற்றி யோசிக்கவோ; அதற்காக ஏங்குதலினாலோ; என்ன பயன்? போனவர்கள் போனாலும்; நம் நேரம் வரும் வரை காத்திருக்கும் கட்டாயத்தில் தான் நாம் இருக்கிறோம். நான் விரக்தியாக பேசவில்லை. இவ்வுலகின் எதார்த்தத்தைப் பற்றிதான் பேசுகிறேன். ' என்று நீலமேகம் சொல்ல,' ஆம்!நாம் மரணத்தை நெருங்கவில்லை. அந்தத் துணிவு நமக்கில்லை. ஆயினும் மரணத்தின் கை எட்டும் தூரத்தில்தான் நாம் இருக்கிறோம். மரணம் நம் பின்னே நிழல் போல் வந்து கொண்டிருக்கிறதை நாம் அறிந்தே இருந்தாலும்; நாம் அது நம்மை ஆலிங்கனம் செய்யும் நிமிடம் வரை நமக்குத் தெரிவதில்லை. நம்மை அறியாமலே கொல்லும் ஆட்கொல்லி புலி போல்; இல்லையா? நாம் இறுதிவரை உயிர்ப்பாக இருக்க வேண்டியதின் அவசியத்தை காந்தியின் எதிர்பாரா மரணம் எனக்கு உணர்த்தி விட்டது. இறுதி தருணத்தில் கூட அவள் உயிர்ப்புடன் சஞ்ஜய் சுப்ரமணியத்தின் பாடலை ரசித்துக்கொண்டு ஃபோனில் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தாள். நமக்கு வயது இப்போது அறுபத்தி நான்கு ஆகிறது. நாமும் இறுதி வரை உயிர்ப்பாக இருக்கவேண்டும். தனிமையில் வாடி வதங்குதல் கூடாது. நாம் நல்ல துணையுடன் இருக்க வேண்டிய நேரம் இதுதான். இல்லையென்றால் தனிமையே நம்மை தின்றுவிடும்.' என்ற நாதனை ' 'இவன் என்ன சொல்கிறான்;' என்பது போல் திகிலுடன் பார்த்தார். இவன் தங்கச்சி காந்தியின் மேல் உயிராகத்தானே இருந்தான்! இப்போது என்ன; இப்படி பேசுகிறானே; என்று கலவரம் அடைந்தாலும்; அப்போதைக்கு இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் சரி; என்று நினைத்து அமைதியானார்; நீலமேகம்.

அடுத்த ஒரு மாதத்தில் நாதன், ஒரு புது மனிதனாக மாறிவிட்டதைப் பார்த்தார் நீலமேகம்.வீட்டை துப்புரவு செய்து புது வண்ணம் அடித்து 'வீடு வாடகைக்கு' என்று தகவல் பலகையை வைத்ததை பொருள் விளங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். மகேசனுடன் போவதாக முடிவெடுத்து விட்டார்; என்றே நினைத்தார்.வாடகைக்கு குடும்பம் ஒன்று வந்த மறுநாள். தனது அத்தியாவசிய சாமான்கள் உடைகள் மடிக்கணினியுடன் நீலமேகம் வீட்டிற்கு வந்தார். இனிமேல் இதுதான் என் வீடும். மீதியிருக்கும் நாட்களில் நாம் ஒன்றாக இருக்கலாம்; ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக. உயிர்ப்புடன் வாழ எனக்கு நீயும், உனக்கு நானுமாக ஆதாரமாயும், துணையாகவும் இருப்போம்.' என்றதும், நீலமேகத்துக்கு பேச்சே வரவில்லை 'என்னடா சொல்கிறாய்! உளறாதே! உங்கள் வீட்டில் என்ன சொல்வார்கள்; உன் சொந்த பந்தம் இதை எப்படிப் பார்க்கும்; உன் பிள்ளைகள்... என்றவரை; மேலே பேசவிடாமல் தடுத்த வன்மீகநாதன்,' அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். என் சாமான்களை ஒழுங்கு படுத்தி அடுக்கி வை. நான் இருவருக்கும் காஃபி போட்டு எடுத்து வருகிறேன். உதவியாளர்களை இனி இங்கேயே வரச் சொல்லியுள்ளேன்.' என்று சொல்லி சமையலறையில் புகுந்தார்.

நீலமேகத்திற்கு அன்று நாதன் கோயிலில் பேசியது நினைவில் வந்து முட்ட, அதன் பொருள் இப்போது நன்கு விளங்கி விட; புன்சிரிப்புடன், நாதனின் சாமான்களை ஒழுங்கு படுத்த ஆரம்பித்தார்.



**சசிகலா விஸ்வநாதன்**



# சிரிப்பு வருது..! சிரிப்பு வருது..!!

*நீதிபதி :* ” அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?”

*திருடன்:* “என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க”



# தினம் ஒரு சமையல்



## பாசி பருப்பு சாப்பாடு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| அரிசி | -2 கிளாஸ் |
| பாசிப்பருப்பு | -1/4 கிளாஸ் |
| வெங்காயம் | -2 பெரிய |
| தக்காளி | -2 |
| எண்ணை | -100 ML |
| பட்டை | -2 |
| கிராம்பு | -1 |
| ஏலக்காய் | -1 |
| கொத்தமல்லி | -சிறிதளவு |
| புதினா | -சிறிதளவு |
| மஞ்சள் தூள் | -1 டீஸ்பூன் |
| உப்பு | -3 டீஸ்பூன் |
| தண்ணீர் | -5 கிளாஸ் |
| இஞ்சி பூண்டு பேஸ்ட் | -1 டீஸ்பூன் |

செய்முறை:



ஒரு பாத்திரத்தில் அரிசி மற்றும் பாசிப்பருப்பை சேர்த்து தண்ணீரில் ஊற வைக்கவும்

இப்போது ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் என்ன சேர்த்து பட்டை கிராம்பு ஏலக்காய் சேர்த்து வதக்கிக் கொள்ளவும் அதனுடன் பெரிய வெங்காயத்தை சேர்த்து வதக்கிக் கொள்ளவும்


பிறகு தக்காளி மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும்

இது கொத்தமல்லி புதினா இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து நன்றாக வதக்கவும்

வதங்கிய பிறகு தண்ணீர் சேர்த்து மஞ்சள் தூள் மற்றும் உப்பு சேர்த்து கொதி வரும் வரை காத்திருக்கவும்

கொதி வந்த பிறகு அரிசியை மூன்று முறை கழுவி வடித்து கொதிக்கும் நீரில் சேர்த்து வேக வைக்கவும். சாப்பாடு வெந்தவுடன் பரிமாறவும்

# மலைக்கள்ளி பயன்கள்



சிறுநீரகத்தில் இருக்கும் கல் மற்றும் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் ரணகள்ளி மூலிகையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ரணகள்ளி செடியை நிறைய வீடுகளில் அழகுக்காக வளர்ப்பார்கள். அதன் ஒரு இலையில் இருந்தே பல செடிகளை நம்மால் வளர்த்துவிட முடியும். இவ்வளவு அற்புதங்கள் நிறைந்த இந்த ரணகள்ளி காலங்காலமாக சிறுநரகக் கற்களைக் கரைக்கப் பயன்படுத்தப்பட்ட மூலிகை என்றே நிறைய பேருக்கு தெரியாது. இந்த ரணகள்ளியின் மருத்துவ குணங்கள் என்ன, அதன் மற்ற நன்மைகள் என்னென்ன என்றும், அவற்றின் பயன்கள் பற்றியும் தெரிந்து கொள்வோம் வாங்க.

ரணகள்ளி அல்லது மலைக்கள்ளி என்று அழைக்கப்படும் என்ற மூலிகை தாவரத்தை உங்களின் வீட்டிலேயே கூட வளர்க்கலாம். இதனுடைய அறிவியல் பெயர் பிரையோபில்லம் பின்னாட்டம். சதைப்பற்றுள்ள இந்த தாவரம் மடகாஸ்கர் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டது. தற்போது எல்லோரது வீடுகளிலும் வளர்க்கக்கூடிய ஒரு தாவரமாக ரணகள்ளி உள்ளது. அலங்கார தாவரமாக இருந்தாலும் இது முக்கிய மூலிகையாகும். அதனை எதற்கெல்லாம் பயன்படுத்தலாம், அதன் நன்மைகள் என்னென்ன என்றும் தெரிந்து கொள்வோம் வாங்க.

வெப்ப நிலை பகுதிகளில் தான் ரணகள்ளி தாவரம் வளரும். இவை ஆசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், மெலனீசியா, பொலினீசியா, அவாய் ஆகிய இடங்களில் அதிக அளவில் வளரும். இதனை அதிசய இலை என்றும் கூறுகின்றனர்.

பெரும்பாலான வீடுகளில் இந்த ரணகள்ளி அழகுக்காக வளர்க்கப்படுகிறது. இலை மிக மென்மையாகவும் அதன் நுனிப்பகுதிகளில் முட்கள் போன்று கூர்மையாகவும் இருக்கும்.

ரணகள்ளி இலைகளில் உள்ள ஆன்டி பயாடிக் பண்புகள் காய்ச்சலின் அறிகுறிகளை போக்கவும், மஞ்சள் காமாலையை குணப்படுத்தவும் உதவும். ரணகள்ளி இலைகளில் உள்ள பிளாவனாய்டுகள், கிளைகோசைடுகள் மற்றும் கரிம அமிலங்கள் சிறுநீரக கல்லைக் கரைக்கவும், சிறுநீரகக் கல் ஏற்படாமல் தடுக்கவும், நீரிழிவு நோயை நிர்வகிக்கவும் உதவும்.

# ரீ-ரிலீஸாகும் கில்லி - துணிவு.. இதுவரை ப்ரீ புக்கிங் வசூல் எவ்வளவு தெரியுமா?



ரீ-ரிலீஸ் படங்களுக்கு சமீபகாலமாக ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது. கடந்த வாரம் மௌனம் பேசியது, காதலர் தினம், மின்னலே ஆகிய படங்கள் ரீ-ரிலீஸ் ஆனது.

இதை தொடர்ந்து வருகிற பிப்ரவரி 20ஆம் தேதி இன்னும் பல பிளாக்பஸ்டர் படங்களை ரீ-ரிலீஸ் செய்யவுள்ளனர்.

விஜய்யின் கில்லி படம் கடந்த 2024ஆம் ஆண்டு ரீ-ரிலீஸ் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் வருகின்ற 20ஆம் தேதி ரீ-ரிலீஸ் செய்கின்றனர். மேலும் அஜித்தின் துணிவு படமும் ரீ-ரிலீஸ் ஆகிறது. இதுமட்டுமின்றி, விஜய் சேதுபதியின் சூது கவ்வும் படம் 13 ஆண்டுகள் கழித்து ரீ-ரிலீஸ் செய்யப்படுகிறது.

இந்த நிலையில், ரீ-ரிலீஸ் ஆகவுள்ள கில்லி மற்றும் துணிவு ஆகிய படங்களின் ப்ரீ புக்கிங் தொடங்கியுள்ளது.

இதில், இதுவரை நடைபெற்ற ப்ரீ புக்கிங்கில் கில்லி ரூ. 3 லட்சமும், துணிவு ரூ. 1.5 லட்சமும் வசூலித்துள்ளது.



நிவேதா ட்ரெண்டி லுக்கில் போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த ஸ்டில்கள் ரசிகர்கள் மத்தியில் வைரல் ஆகி இருக்கிறது. இதோ..

## சினிமா

# நடிகர் சிவகார்த்திகேயன் இத்தனை கோடி சொத்துக்கு சொந்தக்காரரா? அடேங்கப்பா

தொகுப்பாளராக தனது பயணத்தை தொடங்கி, பின் சினிமாவில் ஹீரோவாக களமிறங்கி இன்று முன்னணி ஹீரோவாக வலம் வருகிறார் சிவகார்த்திகேயன்.

மெரினா படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமான இவர், அதன்பின் மனம் கொத்திப் பறவை, வருத்தப்படாத வாலிபர் சங்கம், எதிர்நீச்சல், காக்கி சட்டை, ரஜினிமுருகன், டான், டாக்டர், அமரன் என தொடர்ந்து பல சூப்பர்ஹிட் படங்களை கொடுத்து முன்னணி ஹீரோவானார்.

கடைசியாக இவர் நடிப்பில் பராசக்தி படம் வெளிவந்தது. இப்படம் எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பை பெறவில்லை. அடுத்ததாக சிவகார்த்திகேயன் நடிப்பில் சேயோன் படம் உருவாகிறது. இப்படத்தை கமல் ஹாசன் தயாரிக்க, இயக்குநர் சிவகுமார் முருகேசன் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தின் First லுக் நேற்று மாலை வெளிவந்தது.



நடிகர் சிவகார்த்திகேயனுக்கு இன்று 41வது பிறந்தநாள். ரசிகர்கள் தங்களது வாழ்த்துகளை சமூக வலைத்தளங்கள் மூலம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், சிவகார்த்திகேயனின் சொத்து மதிப்பு குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, நடிகர் சிவகார்த்திகேயனின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 120 கோடி என கூறப்படுகிறது. மேலும் இவர் ஒரு படத்தில் நடிக்க ரூ. 40 கோடி வரை சம்பளம் வாங்கி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இது அதிகாரப்பூர்வமான தகவல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நவகிரகங்களை வழிபடும்போது ஏழு முறை இடமிருந்து வலமாகவும் இரண்டு முறை வலமிருந்து இடமாகவும் சிலர் சுற்றுகிறார்கள். இது சரியா?

இது நிச்சயம் சரியில்லை. இது முற்றிலும் தவறானது. நவக்கிரகங்களில் ராகு, கேது இருவரும் வக்ர கதியில் சஞ்சரிக்கிறார்கள் (தலைகீழாக சுற்றுகிறார்கள்) என்பதால் ஏழுமுறை இடமிருந்து வலமாகவும், 2 முறை வலமிருந்து இடமாகவும் அதாவது தலைகீழாக சுற்ற வேண்டும் என்று காரணத்தையும் சொல்கிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி ஆகிய கிரகங்கள் வக்ர கதியில் சஞ்சரிக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கும் சேர்த்து எத்தனை கிரஹங்கள் வக்ரமோ அத்தனை சுற்றுகளை தலைகீழாக சுற்ற வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

முதலில் அறிவியல் ரீதியான ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

வக்ரம் என்றால் எந்த ஒரு கோளும் பின்நோக்கிச் செல்வதில்லை. சூரியனைச் சுற்றி அனைத்து கோள்களுமே தனித் தனியாக அவரவருக்கு உரிய நீள்வட்டப் பாதையில் நேராகத்தான் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு நீள்வட்டப் பாதையில் பயணிக்கும்போது ஒரு சில நேரங்களில் அவற்றின் வேகம் குறைகிறது. அவ்வாறு வேகம் குறையும் நேரத்தில் நம் கண்களுக்கு அவை பின்நோக்கிச் செல்வது போல் தோன்றுகிறது. உங்களுக்கு எளிதில் புரியும்படியாகச் சொல்லவேண்டும் என்றால் அருகருகே இரு இரயில் வண்டிகள் பயணித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வண்டியின் வேகம் குறைந்தால், வேகமாகச் செல்லும் வண்டியில் பயணிப்போரின் கண்களுக்கு அருகில் உள்ள வண்டி பின்நோக்கிச் செல்வது போல் தோன்றுகிறது அல்லவா. அதுபோலத்தான் இதுவும்.

இவ்வாறு கிரஹங்கள் சுற்றுகின்றபோது அவற்றின் வேகம் குறைகின்ற காலத்தையே வக்ர கதி என்று குறிப்பிடுகிறார்கள். மாறாக நீங்கள் நினைப்பது போல எந்த ஒரு கிரகமும் பின்நோக்கிச் செல்வது இல்லை.

பூமியில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும் நம் கண்களுக்கு வக்ர கதியில் உள்ள கிரஹங்கள் பின்நோக்கிச் செல்வது




போல் தெரிகிறது. அவ்வளவுதான். எந்த ஒரு கோளும் பின்நோக்கி செல்லவே செல்லாது.

ராகு-கேதுக்களைப் பொறுத்த வரை அவைகள் உண்மையான கோள்கள் இல்லை. அவைகள் இரண்டும் வெட்டும் புள்ளிகள். இந்த வெட்டும் புள்ளிகள் ஒரே இடத்தில் நிலைகொண்டு இருப்பதால் பூமியில் முன்நோக்கி பயணிக்கும் நம் கண்களுக்கு அவைகள் பின்நோக்கிச் செல்வது போல் தெரிகிறது. அதற்காக ராகு&கேதுக்களை வணங்க நாமும் பின்நோக்கிச் சுற்றுவது என்பது முற்றிலும் மூடநம்பிக்கையே ஆகும்.

அதோடு மட்டுமல்லாது சுற்றி வந்து வணங்குவது என்பது நமது இயற்கையோடு கலந்த ஒரு நடைமுறை. பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது என்பதைப் படிக்கிறோம்.

அதே போல நாமும் இறைசக்திகளை சுற்றி வந்து வணங்குகிறோம், அதோடு நில்லாது இருந்த இடத்திலிருந்தே தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் வணங்குகிறோம். இது அனைத்தும் இடமிருந்து வலமாகவே அமைகிறது. ஏனெனில் இந்த பூமியும் இடமிருந்து வலமாகவே சூரியனைச் சுற்றுவதோடு தன்னைத்தானும் சுற்றிக் கொள்கிறது. எவ்வாறு இந்த பூமியானது வலமிருந்து இடமாகச் சுற்றுவது இல்லையோ, அதே போல நாமும் வலமிருந்து இடமாக இறைசக்திகளைச் சுற்றக்கூடாது. அவ்வாறு சுற்றினால் அது இயற்கைக்கு மாறான ஒரு செயல். அதனால் உடலுக்கு நோய்தான் வருமே தவிர நன்மைகள் விளையாது.

நவக்கிரகங்கள் எண்ணிக்கையில் ஒன்பது என்பதற்காக ஒன்பது சுற்றுதான் சுற்றவேண்டும் என்ற கருத்தே தவறானது. ஏன் ஒன்பது சுற்றுகளுக்கு மேல் சுற்றினால் நவக்கிரகங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களா என்ன.? நம்மால் எத்தனை சுற்று சுற்ற இயலுமோ அத்தனை முறை சுற்றினால் போதும். ஒரே ஒருமுறை சுற்றினாலும் சிரத்தையோடு சுற்ற வேண்டும்.

இந்த உண்மையைப் புரிந்துகொண்டு சுற்றுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் இறைசக்திகளின் மேல் உங்களது கவனத்தை செலுத்தி இடமிருந்து வலமாக சுற்றி வந்து வணங்குங்கள். வளம் பெறுவீர்கள்.

சர்வம் சிவார்ப்பணம்..!



ப.கோபிபச்சமுத்து
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் கோவிந்தகிரி வரலாறு

கோவிந்தகிரி அல்லது கோவிந்த குரு (18581931) சமூக மற்றும் சமய சீர்திருத்தவாதி ஆவார். 1900-ஆண்டுகளின் முற்பகுதியில் தற்கால குஜராத்-இராஜஸ்தான் எல்லைப்பகுதிகளில் ஆரவல்லி மலைத்தொடர்களில் வாழ்ந்த பில் பழங்குடி மக்களின் சமூக மற்றும் சமயச் சீர்திருத்தத்திற்காக பாடுபட்டவர். இவர் பகத் இயக்கத்திற்காக நன்கறியப்பட்டவர்.

## இளமை வாழ்க்கை

லம்பாடி எனும் பஞ்சாரா நாடோடிக் குடும்பத்தில் (தற்கால இராஜஸ்தான் மாநிலத்தில்) துங்கர்பூர் சமஸ்தானத்தில் கோவிந்தகிரி பிறந்தார். கிராமக் கோயில் பூசாரியின் உதவியுடன் இளமைக் கல்வியை தானாக கற்றார். இவரது இளமைக் காலத்தில் பில் பழங்குடி மக்களை துங்கர்பூர் சமஸ்தானம் மற்றும் சந்திராபூர் சமஸ்தானங்களில் கூலி வழங்காமல் கொத்தடிமைகள் போன்று வேலை வாங்கப்பட்டனர். இவரது மனைவி மற்றும் குழந்தை HIS பஞ்சத்தால் உயிரிழந்தனர். பின்னர் துங்கர்பூர் சமஸ்தானத்திலிருந்து அருகில் உள்ள சந்திராப்பூர் சமஸ்தானப் பகுதிக்கு கோவிந்தகிரி குடிபெயர்ந்தார்.அங்கு தனது சகோதரனின் விதவை மனைவியை மணந்தார். அங்குள்ள ஒரு இந்து துறவியிடம் சீடராக சேர்ந்து கொண்டு, தனது பெயரை கோவிந்தகிரி எனும் மாற்றிக் கொண்டார்.

செயற்பாடுகள்

சமூக மற்றும் சமய நிலைகள்

பில் மக்கள், லம்பாடி போன்ற பழங்குடி மக்களின் ஒழுக்கம், சமூக மற்றும் சமய வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக கோவிந்தகுருவே கள், சாராயம் போன்ற மது வகைகளை குடிக்காதும், அசைவ உணவுகளை உண்ணாதிருந்தும் இருந்தார். கோவிந்த குரு பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காக சம்பா சபா எனும் அமைப்பை நிறுவினார். கோவிந்தகுரு ஓரிறை கோட்பாட்டை வலியுறுத்தினார். கள் மற்றும் மாமிசம் உண்ணாமை, நிதானத்தை கடைபிடித்தல், குற்றங்களை கைவிடுதல், மூட நம்பிக்கைகளை ஒழித்தல், வேளாண்மை செய்தல் போன்ற நற்பழக்கங்களை பழங்குடி மக்களிடையே வலியுறுத்தினார். தங்களுக்கான தீ வழிபாட்டுச் சடங்குகளையும், வீடுகளில் கட்டுவதற்கு கொடியை அறிமுகப்படுத்தினார்.

## அரசியல் செயற்பாடுகள்

பிரித்தானிய இந்தியாவின் ஆட்சியின் கீழிருந்த பான்ஸ்வாரா சமஸ்தானம், சந்திராப்பூர் சமஸ்தானங்களின் நிலக்கிழார்கள் பழங்குடி மக்களின் உழைப்பை சுரண்டுவதற்கு கோவிந்தகுரு கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார். ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள நிலங்கள அனைத்தும் பில் பழங்குடி மக்களுக்கே உரிமையானது என்று போதனை செய்தார். மேலும் 800 ஆண்டுகளுக்கு முன்னர் பில் இராச்சியம் இருந்ததை மக்களுக்கு நினைவுப்படுத்தினார்.

## ஆதரவும் எதிர்ப்பும்

கோவிந்தகுரு ஆரவல்லி மலைத்தொடர் பகுதிகளில் இருந்த சந்த் சமஸ்தானம், துங்கர்பூர் சமஸ்தானம் மற்றும் பான்ஸ்வாரா சமஸ்தானம் மற்றும் பிரித்தானிய இந்தியாவின் கீழிருந்த பஞ்சமகால் மாவட்டப் பகுதிகளில் இருந்த பில் பழங்குடி மக்களை பெரிய அளவில் ஒன்று திரட்டினார். கோவிந்தகுருவின் போதனைகளால் பழங்குடி மக்கள் கள் மற்றும் சாராயம் போன்றவைகள் குடிப்பதை நிறுத்தியதால், சமஸ்தானங்களுக்கு பெரிய அளவில் நிதி இழப்பு ஏற்பட்டது. இதனால் கோவிந்த குரு மீது சமஸ்தான மன்னர்கள் வெறுப்புற்றனர்.



## முதல் கைது மற்றும் விடுவிப்பு

மது விலக்கு பிரச்சாரம் செய்தமைக்காக துங்கர்பூர் சமஸ்தான காவலர்கள் கோவிந்தகுருவை 1912-இல் கைது செய்தனர். கைது காரணமாக அவரைப் பின்பற்றுபவர்களை ஏமாற்றியதாக அரசு குற்றம் சாட்டியது. மேலும் அவருடைய சேமிப்பைப் பறிமுதல் செய்தது மற்றும் அவரது மனைவி மற்றும் குழந்தையை சிறையில் அடைத்து அவரது இயக்கத்தை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தது. இருப்பினும் ஏப்ரல் 1913-இல் துங்கர்பூர் சமஸ்தானம் கோவிந்தகுருவை நிபந்தனையின்றி விடுவித்தது.

## மன்காட் மலை நிகழ்வுகள்

இதர் சமஸ்தானப் பகுதியின் சந்த் சமஸ்தானம் மற்றும் பான்ஸ்வாரா சமஸ்தானத்தின் மன்காட் மலைக்குன்றுகளில் தனது ஆதரவாளர்களுடன் தங்கியிருந்த கோவிந்தகுருவை இதர் சமஸ்தானத்தின் காவலர்கள் பிடிக்க முயன்றனர். 31 அக்டோபர் 1913 அன்று கோவிந்தகுருவை அவரது ஆதரவாளர்களையும் சந்த் சமஸ்தானத்தின் இரண்டு காவலர்களை கோவிந்தகுருவும் அவரது ஆதரவாளர்களும் பிடித்தனர். 1 நவம்பர் 1913 அன்று பிரித்தானிய இந்தியாவின் ஆயுதப்படைகளுடன் உதவியுடன் வந்த சமஸ்தானங்களின் படைகள் பான்ஸ்வாராவில் உள்ள பில் மக்களின் வீடுகளை சூறையாடி, 1,500 பில் மக்களை கொன்று குவித்தும், கைதும் செய்தனர். 17 நவம்பர் 1913 அன்று மன்காட் மலைக்குன்றுகளில் இருந்த கோவிந்தகுரு மற்றும் அவரது ஆதரவாளர்களை பிடிக்கும் முயற்சியில் பல பில் மக்கள் மாண்டனர் மற்றும் கோவிந்தகுருவும் அவரது ஆதரவாளர் ஒருவரும் பிடிபட்டார்.

## சிறை தண்டனை

மன்காட் மலைக்குன்றுகளில் பிடிப்பட்ட கோவிந்தகுரு மற்றும் ஆதரவாளர்களை 2 பிப்ரவரி 1914 அன்று நீதிமன்றத்தில் நிறுத்தினர். நீதிமன்றம் கோவிந்தகுருவுக்கு தூக்குத் தண்டனையும், அவரது ஆதரவாளர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்தது. மேல்முறையீட்டால் கோவிந்தகுருவின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

## பிந்தைய வாழ்க்கை

1919-இல் அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் கோவிந்தகுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். கோவிந்தகுரு 30 அக்டோபர் 1931 அன்று இறக்கும் வரை தற்கால குஜராத் மாநிலத்தின் பஞ்சமகால் மாவட்டத்தின் லீம்புடி அருகில் உள்ள காம்போய் கிராமத்தில் காலத்தை கழித்தார்.

## மரபுரிமை பேறுகள்

31 சூலை 2012 அன்று குஜராத் அரசின் முதலமைச்சர் நரேந்திர மோதி, கோவிந்தகுரு சமாதி இருக்கும் காம்போய் கிராமத்தில் கோவிந்தகுரு பெயரில் ஒரு பூங்கா ஒன்றை நிறுவினார். 1 நவம்பர் 2022 அன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி கோவிந்தகுருவின் நினைவிடத்திற்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் இராஜஸ்தான் மாநிலத்தின் மன்கார் தாம் பகுதிக்குச் சென்று கோவிந்த குருவின் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்தினார். கோத்ரா நகரத்தில் கோவிந்தகுரு பெயரில் சிறி கோவிந்த குரு பல்கலைக்கழகம் 2015-இல் நிறுவப்பட்டது.

## இந்தியாவில் வாரம் 10 கோடி பயனர்கள்! சாட்ஜிபிடி புதிய சாதனை!!




**புதுடெல்லி, பிப்.18:**

செய்யறிவு (ஏஐ) நிறுவனமான சாட்ஜிபிடியை பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

பிப்ரவரி நிலவரப்படி வாராவாரம் 10 கோடி பயனர்கள் சாட் ஜிபிடியை பயன்படுத்துவதாக அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சாட்ஜிபிடி பயன்பாட்டுக்கான இரண்டாவது மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். டில்லியில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சிமாநாடு இன்று (பிப். 16) முதல் பிப். 20ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதனையொட்டி சாட்ஜிபிடி தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் நாட்டில் சாட்ஜிபிடி பயன்பாடு அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சாட்ஜிபிடி பயன்பாட்டிற்கான மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளது. இந்திய பயனர்கள் அதிகம் பயன்படுத்தும் தளமாக சாட்ஜிபிடி மாறியுள்ளதையே இந்த எண்ணிக்கை காட்டுகிறது. தினசரி வேலைகளுக்கும் சாட்ஜிடிபியை இந்திய பயனர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். உலக அளவில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் சாட்ஜிபிடியை பயன்படுத்துவது இந்தியாவில்தான். இந்தியாவில் 10 கோடி பயனர்கள் சாட்ஜிபிடியை பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

## சி.பி.எஸ்.இ. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தொடக்கம்



**புதுடெல்லி, பிப்.18:**

சி.பி.எஸ்.இ. கல்வி வாரியத்தில் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் 2 பொதுத்தேர்வுகள் நடத்தப்படுகிறது. இதில் முதலாவது பொதுத்தேர்வு (17-02-2026) தொடங்குகியது. 2-வது பொதுத்தேர்வு மே 15-ந் தேதி முதல் ஜூன் 1-ந் தேதி வரை நடக்கிறது. தங்கள் மதிப்பெண்ணை அதிகரிக்க விரும்புபவர்களுக்காக இரண்டாவது தேர்வு வசதி செய்யப்பட்டு உள்ளது. அதேநேரம் முதலாவது பொதுத்தேர்வை மாணவர்கள் கட்டாயம் எழுத வேண்டும் என சி.பி.எஸ்.இ. கூறியுள்ளது.

நேற்று 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு கணித பாடமும், 21-ந்தேதி ஆங்கிலமும், 25-ந்தேதி அறிவியலும், மார்ச் 2-ம் தேதி இந்தி தேர்வும், மார்ச் 7-ந்தேதி சமூக அறிவியல் பாட தேர்வும் நடைபெறுகிறது. சி.பி.எஸ்.இ., பிளஸ்-2 மாணவர்களுக்கு நேற்று உடற்கல்வி தேர்வு, 20-ந் தேதி இயற்பியல், 28-ந்தேதி வேதியியல், மார்ச் 9-ந்தேதி கணிதம் ஆகிய பாடங்களுக்கு தேர்வுகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவ மாணவிகள் இத்தேர்வினை எழுதுகிறார்கள்.

இது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி சன்யம் பரத்வாஜ், “முதலாவது பொதுத்தேர்வு அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயம். இதில் வெற்றி பெறும், தகுதி வாய்ந்த மாணவர்கள் தங்கள் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக அறிவியல், கணிதம், சமூக அறிவியல் மற்றும் மொழிப்பாடம் என ஏதாவது 3 பாடங்களில் 2-வது தேர்வை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

முதலாவது பொதுத்தேர்வில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களை எழுதாத மாணவர்கள், 2-வது பொதுத்தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் 'மீண்டும் கட்டாயம்' என்ற பிரிவுக்கு தள்ளப்பட்டு, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் பிரதான (முதலாவது பொதுத்தேர்வு) தேர்வில்தான் பங்கேற்க முடியும்” என்று கூறினார்.

## கர்நாடகாவில் இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணி கூட்டு பாலியல் வன்கொடுமை; குற்றவாளிகள் 3 பேருக்கு தூக்கு தண்டனை

**பெங்களூரு, பிப்.18:**

இஸ்ரேலை சேர்ந்த 27 வயதான இளம்பெண் கடந்த ஆண்டு மார்ச் மாதம் கர்நாடகாவுக்கு சுற்றுலா வந்துள்ளார். அவர் கர்நாடகாவின் விஜயவாடா மாவட்டம் ஹம்பி பகுதியில் உள்ள 29 வயதான இளம்பெண்ணின் வீட்டில் ஹோம்ஸ்டே (Homestay) முறையில் தங்கி இருந்தார்.

இதனிடையே, கடந்த ஆண்டு மார்ச் 6ம் தேதி மாலை இஸ்ரேலிய சுற்றுலா, பயணி தான் தங்கி இருந்த ஹோம்ஸ்டே வீட்டின் உரிமையாளர் மற்றும் அமெரிக்கா, ஒடிசா, மராட்டியம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 3 ஆண் சுற்றுலா பயணிகள் என மொத்தம் 5 பேரும் ஹம்பி அருகே உள்ள துங்காத்ரா கால்வாய் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பைக்கில் வந்த மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 பேர் கால்வாய் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்த 5 பேரிடமும் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். ஆனால், சுற்றுலா பயணிகள் பணம் கொடுக்காததால் ஆத்திரமடைந்த 3 பேரும் ஆண் சுற்றுலா பயணிகள் 3 பேரையும் கால்வாய்க்குள் தள்ளிவிட்டனர். பின்னர், இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணியையும், ஹோம்ஸ்டே வீட்டின் உரிமையாளரான இளம்பெண்ணையும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். கால்வாய்க்குள் தள்ளிவிடப்பட்ட ஆண் சுற்றுலா பயணிகளில் ஒடிசாவை சேர்ந்த சுற்றுலா பயணி தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார். எஞ்சிய 2 ஆண் சுற்றுலா பயணிகள் கால்வாயில் நீந்தி கரைசேர்ந்தனர்.

இந்தசம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் ஆண் சுற்றுலா பயணியை கால்வாய்க்குள் தள்ளி கொலை செய்துவிட்டு இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணி உள்பட 2 பெண்களை கூட்டு பாலியல் வன்கொஉமை செய்து தலைமறைவான மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 3 பேரும் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் குற்றவாளிகள் மீதான வழக்கு கொப்பள் மாவட்டம் கங்காவதி நகர முதன்மை கூடுதல் அமர்வு கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு கோர்ட்டில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இஸ்ரேலிய சுற்றுலா பயணி உள்பட 2 பேரை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தது, கால்வாயில் தள்ளி ஆண் சுற்றுலா பயணியை கொலை செய்தது உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 குற்றவாளிகள் மீதும் நிரூபணம் ஆனது. இதையடுத்து குற்றவாளிகள் 3 பேருக்கும் தூக்குதண்டனை விதித்து கோர்ட்டு உத்தரவிட்டது.

## மதம் பிடித்து சுற்றித்திரியும் படையப்பா யானை: வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு

**திருவனந்தபுரம், பிப்.18:**

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம், மூணாறு, மறையூர் எஸ்டேட் பகுதிகள் மற்றும் சாலையோரங்களில் இரவு, பகல் நேரங்களில் காட்டு யானை ஒன்று கம்பீரமாக சுற்றித்திரியும். இந்த யானைக்கு இப்பகுதி பொதுமக்கள் படையப்பா என்று பெயர் வைத்து அழைக்கின்றனர்.

இந்தநிலையில் அந்த யானை கடந்தசில நாட்களாக மூணாறு மற்றும் மறையூர் சாலைகளில் செல்லும் வாகனங்களை அடிக்கட மறித்து சேதப்படுத்தி விட்டு செல்கிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் ஒரு பஸ், கார், ஆட்டோவின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியது.

இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் அந்த படையப்பா யானையை ஆய்வு செய்தபோது அதற்கு மதம்பிடித்து சுற்றித்திரிவது தெரியவந்தது. இதனால் வனத்துறையினர் அந்த யானையை 24 மணி நேரம் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.


அந்த யானை எங்கு செல்கிறது. அதன் செயல்பாடுகள் எப்படி உள்ளது என்று பார்த்து வருகின்றனர். இதனால் மூணாறு மற்றும் எஸ்டேட் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாகஇருக்கவேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## இறந்துபோன பாட்டிக்கு திதி கொடுத்து படையலிட ஆமைகளை வேட்டையாடிய 4 வாலிபர்கள் கைது

**பெங்களூரு, பிப்.18:**

கர்நாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் பெல்தங்கடியில் சோமாவதி ஆறு உள்ளது. இந்தநிலையில், பெல்தங்கடி போலீசாருக்கு நேற்று முன்தினம் சோமா வதி ஆற்றில் சிலர் ஆமைகளை வேட்டையாடி அதன் இறைச்சியை சமைத்து சாப்பிடுவதாக தகவல் கிடைத்தது. அதன்பேரில், அங்கு விரைந்து சென்ற போலீசார் அப்பகுதியில் சோதனை நடத்தினர்.

அப்போது, ஆற்றின் கரையில் வாலிபர்கள் 4 பேர் ஆமைகளை கொன்று அவற்றை சமைத்து கொண்டிருப்பதை போலீசார் பார்த்தனர். இதையடுத்து, அவர்களை மடக்கிப்பிடித்த போலீசார் அவர்கள் 4 பேரையும் கைது செய்தனர். அவர்கள் சமைத்த, தீயில் கருகிய நிலையில் இருந்த 4 ஆமைகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.



பின்னர், அவர்களை போலீஸ் நிலையம் அழைத்து சென்று போலீசார் விசாரித்தனர். விசாரணையில், அவர்கள் 4 பேரின் பாட்டியான தேவம்மா என்பவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு உயிரிழந்துள்ளார். அவருக்கு திதி கொடுப்பதற்காக சோமாவதி ஆற்றங்கரைக்கு சென்ற 4 பேரும் அங்கு அவரின் விருப்ப உணவான ஆமைக்கறியை வைத்து திதி கொடுத்தால், ஆத்மா சாந்தி அடையும் என நினைத்துள்ளனர்.

இதனால் அவர்கள் 4 பேரும் ஆற்றில் இருந்து 4 ஆமைகளை வேட்டை யாடி, அவற்றை கொன்று சமையல் செய்து படையலிட முடிவு செய்து, பிடிபட்ட ஆமைகளை தீயில் வாட்டியதும் தெரியவந்தது. இதையடுத்து, பெல்தங்கடி போலீசார் அவர்கள் 4 பேரையும், ஆமைகளையும் வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் 4 பேரிடமும் விசாரணை நடத்திய வனத்துறையினர், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்தனர். பின்னர், அவர்களுக்கு கோர்ட்டில் விசாரணைக்கு ஆஜராகுமாறு நோட்டீஸ் வழங்கிய வனத்துறையினர், 4 பேரையும் விடுதலை செய்தனர்.

## ராஜஸ்தானில் பட்டாசு ஆலை வெடி விபத்தில் 8 பேர் உயிரிழப்பு

**ஜெய்ப்பூர், பிப்.18:**

ராஜஸ்தானின் அல்வார் மாவட்டம், பிவாடி தொழிற் பேட்டையில் மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையில் சட்ட விரோதமாக பட்டாசு ஆலை இயங்கி வந்துள்ளது. இங்குள்ள ஒரு கட்டிடத்தில் நேற்று காலையில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இதையடுத்து அருகில் இருந்த மற்ற கட்டிடங்களுக்கும் தீ வேகமாகப் பரவியது. இதில் மேலும் 3 முறை வெடி விபத்து ஏற்பட்டது.

விபத்தின் போது அந்த ஆலையில் சுமார் 25 தொழிலாளர்கள் இருந்ததாகவும் இவர்கள் பிஹார் மற்றும் உ.பி.யை சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த விபத்தில் 8 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயம் அடைந்தனர். வெடி விபத்தை தொடர்ந்து அருகில் உள்ள ஆலைகளில் இருந்த தொழிலாளர்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டனர். அப்பகுதியில் தற்காலிகமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.தீயை அணைக்கும் பணியில் 6 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. தீயணைப்பு வீரர்கள் நீண்டநேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர். தொழிற்சாலை கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்தவர், அதன் உரிமையாளருக்கு தெரியாமல் அங்கு பட்டாசு தயாரித்து வந்ததாக கூறப்படுகிறது.


இது தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## மேற்கு வங்காளத்திற்கு மத்திய மந்திரி அமித்ஷா 18-ந்தேதி பயணம்

**கொல்கத்தா, பிப்.18:**

மேற்கு வங்காளத்தில் நடப்பு ஆண்டில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா வருகிற 18-ந்தேதி அந்த மாநிலத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

அன்று மதியம் 1.30 மணியளவில் கொல்கத்தா விமானநிலையத்திற்குசென்று பின்னர், ஹெலிகாப்டரில் மாயாபூர் செல்வார். இஸ்கான் கோவிலில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பார். 2 மணிநேரம் கோவிலில் செலவிடுவார்.



அவர் இஸ்கானில் ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகுரின் 152-வது பிறந்த ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார். மத்திய கூட்டுறவு துறை மந்திரியாகவும் உள்ள அமித்ஷாவின் தலைமையின் கீழ், மேற்கு வங்காளத்தில் பரந்த அளவிலான, கட்டமைப்பு சீர்திருத்தங்களை கடந்த சில ஆண்டுகளாகவே கூட்டுறவு அமைச்சகம் செய்து வந்துள்ளது. அந்த துறையை வலுப்படுத்தி வந்துள்ளதுடன், அதிக வெளிப்படை தன்மை கொண்ட மற்றும் நவீனப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் மாற்றி உள்ளது என அதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

## ஒடிசாவில் குண்டு தயாரித்தபோது வெடி விபத்தில் 2 பேர் உயிரிழப்பு

**புவனேஸ்வர், பிப்.18:**

ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் சுந்தர்படா பகுதியில் கடந்த ஜனவரி 27ம் தேதி ஒரு வீட்டின் மொட்டை மாடியில் வெடிபொருட்கள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன.

இந்த சம்பவத்தில் ஷாநவாஸ் மாலிக், அவரது கூட்டாளி அமியா மாலிக், ஷாநவாஸின் தாய் மற்றும் மற்றொருவர் என நான்கு பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி ஷாநவாஸ் மாலிக் மற்றும் அவரது தாய் ஆகிய இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இது குறித்து காவல் துணை ஆணையர் (டிசிபி) ஜக்மோகன் மீனா கூறுகையில், "இந்தச் சம்பவத்தில் காயமடைந்த முக்கிய நபர் ஏற்கெனவே குற்றப் பின்னணி கொண்டவர்.

ஏதோ ஒரு குற்றச் செயலில் ஈடுபடும் நோக்கில் அவர்கள் வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. சம்பவ இடத்தில் இருந்து வெடி மருந்து துகள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. தீவிர விசாரணை நடைபெறுகிறது" என்றார்.

## ரயில் வரும்போது தண்டவாளத்தில் படுத்து உறங்கிய நபர்

**புனே, பிப்.18:**

மராட்டியத்தின் மும்பை நகரில் பரபரப்பாக செயல்படும் சிவாஜி ரயில் நிலையத்தில் தண்டவாளம் ஒன்றில் நபர் ஒருவர் வெள்ளை நிறத்தில் விரிப்பை விரித்து குறுக்கே படுத்து கிடந்துள்ளார்.

அந்த சமயத்தில் ரெயில் ஒன்று நிலையத்திற்கு அந்த வழியே வந்துள்ளது. இதனை பார்த்த நடைமேடையில் இருந்தவர்கள் கூச்சல் போட்டு அவரை எழுந்து போக கூறி சத்தம் போட்டனர். ஆனால், அந்த நபர் எதனையும் கண்டு கொள்ளவில்லை. அவர், குடிபோதையில் இருந்ததுபோன்று கிடந்துள்ளார். அந்த ரெயில் அருகே வந்ததும் அதிக சத்தத்துடன் ஒலி எழுப்பியது. அப்போதும் அந்த நபர் எழுந்திருக்கவில்லை. எனினும், ரெயில் மெதுவாக வந்து சற்று தூரத்திலேயே நின்று விட்டது. இதனால் பெரிய துர்சம்பவம் எதுவும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

## கர்நாடகா: 5-க்கும் மேற்பட்ட கோர்ட்டுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**மங்களூரு, பிப்.18:**

கர்நாடகாவில் உள்ள மங்களூரு மாவட்ட கோர்ட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு உள்ளது. இதுபற்றி நகர காவல் ஆணையாளர் சுதீர் குமார் ரெட்டி கூறும்போது, வெடிகுண்டு மிரட்டல் செய்தி கிடைத்ததும் உடனடியாக மங்களூரு மாவட்ட கோர்ட்டு வளாகத்திற்கு போலீசார் சென்றனர்.

கோர்ட்டில் இருந்து வழக்கறிஞர்கள், பணியாளர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. விரிவாக சோதனை செய்ததில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. இதனை தொடர்ந்து, வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என போலீசார் உறுதி செய்தனர். மங்களூரு வடக்கு காவல் நிலையத்தில் இதுதொடர்பாக வழக்கு பதிவாகி உள்ளது. இதேபோன்று, கர்நாடக ஐகோர்ட்டின் தார்வாத் கிளை, தார்வாத் மாவட்ட கோர்ட்டு, மாண்டியா, குடகு, ஹாவேரி உள்ளிட்ட கோர்ட்டுகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. சோதனைக்கு பின்னர் அது புரளி என தெரிய வந்துள்ளது.

## திடீரென முடங்கிய எக்ஸ் வலைதளம்; பயனாளர்கள் அவதி

**டெல்லி, பிப்.18:**

உலகின் மிகவும் பிரபலமான சமூகவலைதளமாக எக்ஸ் வலைதளம் (டுவிட்டர்) திகழ்கிறது. இந்த சமூக வலைதளத்தை உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இன்று மாலை எக்ஸ் வலைதளம் திடீரென முடங்கியுள்ளது. மாலை 7 மணி முதல் வலைதளம் முடங்கியுள்ளது. பயனாளர்களின் எக்ஸ் வலைதள முகப்பு பக்கம், பிற எக்ஸ் வலைதள கணக்குகளை காண்பிக்கும் பக்கம் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளும் முடங்கியுள்ளது. இதனால் பயனாளர்கள் கடும் அவதியடைந்துள்ளனர்.

## மும்பை கவுன்சிலர்களில் 24% பேர் மீது குற்ற வழக்குகள்

**புதுடெல்லி, பிப்.18:**

பிரிஹன் மும்பை மாநகராட்சி தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் பாஜக, சிவசேனா (ஷிண்டே) கூட்டணி வெற்றி பெற்றது. பாஜகவைச் சேர்ந்த ரிது தாவ்டே மேயராக சமீபத்தில் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடிஆர்), இந்த தேர்தலில் வெற்றி பெற்ற 227 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: ”மும்பை மாநகராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற கவுன்சிலர்களில் 54 பேர் (24%) தங்கள் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக தங்கள் மனுவில் தெரிவித்துள்ளனர். 29 பேர் (13%) தீவிர குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக கூறியுள்ளனர்.

180 பேர் (79%) தங்களுக்கு ரூ.1 கோடிக்கு மேல் சொத்து இருப்பதாக தெரிவித்துள்ளனர். அதேநேரம் வெற்றி பெற்றவர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.7.18 கோடியாக உள்ளது. கவுன்சிலர்களில் 60% பேர் பெண்கள். 50% பேர் குறைந்தபட்சம் இளநிலை பட்டப்படிப்பை முடித்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சூரிய மின்சக்தி திட்டத்தில் குஜராத், மகாராஷ்டிரா உ.பி. முன்னிலை

**புதுடெல்லி, பிப்.18:**

பிரதமரின் சூர்ய இல்லம்: இலவச மின்சார திட்டத்தை மத்திய அரசு கடந்த 2024-ம் ஆண்டு பிப்ரவரி 13-ம் தேதி அறிமுகம் செய்தது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் வீடுகளின் கூரைகளில் சூரியசக்தித் தகடுகளை அமைப்பதன் மூலம் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்குவதாகும்.

ரூ.75,021 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், மார்ச் 2027-க்குள் ஒரு கோடி வீடுகளில் சோலார் அமைப்புகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மத்திய அரசு ஒரு வீட்டுக்கு ரூ.78,000 வரை ஒருமுறை நிதியுதவி வழங்குகிறது, இந்த திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில் நாடு முழுவதும் சுமார் 8,691 மெகாவாட் திறன் கொண்ட 23 லட்சத்துக்கும் அதிகமான ரூஃப்டாப் சோலார் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

இதற்காக அரசு ரூ.16,932.4 கோடி மானியம் வழங்கி உள்ளது. இந்த திட்டத்தை பயன்படுத்திக் கொண்டதில் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. குஜராத் 5.6 லட்சத்துடன் முதலிடத்திலும், மகாராஷ்டிரா (4.5 லட்சம்) 2-ம் இடத்திலும் உத்தரபிரதேசம் (3.7 லட்சம்) 3-ம் இடத்திலும் உள்ளன.




## மின்சார ரயிலில் டிக்கெட் எடுக்காமல் தகராறு: போதை இளைஞரை ஆர்பிஎஃப் காவலர் தாக்கிய வீடியோ வைரல்





**சென்னை, பிப்.18:** மின்சார ரயிலில் டிக்கெட் எடுக்காமல் டிடிஇ-யிடம் தகராறில் ஈடுபட்ட போதை இளைஞரை ஆர்பிஎஃப் காவலர் கழுத்தில் கால் வைத்து தாக்கியது தொடர்பான வீடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை சென்ட்ரலில் இருந்து கும்மிடிப்பூண்டிக்கு கடந்த 11-ம் தேதி ஒரு மின்சார ரயில் புறப்பட்டது. இந்த ரயிலின் முதல் வகுப்பு பெட்டியில் மது போதையில் ஓர் இளைஞர் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

அவரை டிக்கெட் பரிசோதகர் சோதித்த போது, அந்த நபர் டிக்கெட் இன்றி பயணிப்பது தெரியவந்தது. இதையடுத்து, அந்த நபரை டிக்கெட் பரிசோதகர் கீழே இறக்கி, அபராதம் விதிக்க முயன்றார்.

அதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர், டிக்கெட் பரிசோதகரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதுகுறித்து ஆர்பிஎஃப் போலீஸாரிடம் டிக்கெட் பரிசோதகர் தெரிவித்தார்.

அங்கு வந்த ஆர்பிஎஃப் காவலர் ஒருவர், இளைஞரை பிடிக்க முயன்றபோது இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. பின்னர் அந்த இளைஞர் தப்ப முயன்றபோது, திருவொற்றியூர் ரயில் நிலைய நடைமேடையில் பொதுமக்கள் முன்னிலையில் இளைஞரை தரையில் தள்ளி கழுத்தில் கால் வைத்து தாக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவின.

இச்சம்பவம் குறித்து, கொருக்குப்பேட்டை ரயில்வே போலீஸாரிடம் கேட்டபோது, மதுபோதையில் பயணித்த இளைஞர், கொருக்குப்பேட்டைச் சேர்ந்த தர்மன் (22) என்பதும், இவர் மீது தண்டையார்பேட்டை ஆர்பிஎஃப் போலீஸார் வழக்குப்பதிந்து, அபராதம் விதித்து அனுப்பியதும் தெரியவந்தது.

## கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 2 பெண்கள் உள்பட 7 பேருக்கு ஆயுள் தண்டனை: ஐகோர்ட் தீர்ப்பு



**சென்னை, பிப்.18:** 15 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த திருவான்மியூர் கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 2 பெண்கள் உள்பட 7 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருவான்மியூரைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் கடந்த 2010-ம் ஆண்டு ஜூனில் முன்விரோதம் காரணமாக ஒரு கும்பலால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக, 16 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை 7-வது கூடுதல் அமர்வு நீதிமன்றம், போதிய ஆதாரங்கள் இல்லை எனக்கூறி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து கடந்த 2017-ம் ஆண்டு தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து காவல் துறை தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை நீதிபதிகள் பி. வேல்முருகன், எம். ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது.

அப்போது அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.தாமோதரன் ஆஜராகி, கொலையை நேரில் பார்த்த ஏழுமலையின் மனைவி மற்றும் குழந்தைகளின் வாக்குமூலங்களை அமர்வு நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை என்றும், சிறிய முரண்பாடுகளை காரணம் காட்டி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் ஒட்டுமொத்தமாக விடுதலை செய்துள்ளது எனவும் வாதிட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 பேர் இறந்து விட்ட நிலையில், எஞ்சிய 9 பேர் மீதான வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த கொலை சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான கொலைக்குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி, அனைவரையும் விடுதலை செய்தது ஏற்புடையதல்ல.

எனவே, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 9 பேரையும் குற்றவாளிகள் என அறிவிக்கிறோம் என தெரிவித்து விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்தனர். மேலும், கடந்த வாரம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான ஸ்டீபன்ராஜ், சந்துரு ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ. ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தனர்.

எஞ்சிய 7 பேர் மீதான தண்டனை விவரங்களை அறிவிப்பதற்காக அவர்களை பிப்.16 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த போலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தனர். அதன்படி, இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட லட்சுமி, செல்வி என 2 பெண்கள் உள்பட சரவணன், அப்புனு, குருமூர்த்தி, ஹரிஹரன், நாகராஜன் ஆகிய 7 பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ. ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நீதிபதிகள் ஏற்க மறுத்து சிறையில் அடைக்க உத்தரவிட்டனர்.

## கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்.27-ம் தேதி பணி புறக்கணிப்பு போராட்டம்: அரசு மருத்துவர்கள் அறிவிப்பு



**சென்னை, பிப்.18:** அரசு மருத்துவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்.27-ம் தேதி பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், மார்ச் முதல் வாரத்தில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் தொடங்க உள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354-ஐ மறுவரையறை செய்வது, ஆரம்ப சுகாதார நிலையமருத்துவர்களுக்கு ரூ.3 ஆயிரம் படி வழங்குவது, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவப் பணியிடங்கள் உருவாக்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு மருத்துவர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக, பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அனைத்து அரசு மருத்துவர் சங்க கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் நேற்று நடந்தது.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து, கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், சாமிநாதன், அகிலன், சுந்தரேசன் ஆகியோர் கூறியதாவது: அரசு மருத்துவர்களின் கோரிக்கை குறித்து முதல்வரிடம் பேசி தீர்வு காணப்படும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்தது வரவேற்கத்தக்கது. எனினும், தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தீவிரப்படுத்தப்படும்.

பிப்.27-ம் தேதி முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் விதமாக, அவசர சிகிச்சைகள் பாதிக்கப்படாமல், வழக்கமான பணிகளைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அதிலும் தீர்வு ஏற்படாவிட்டால், மார்ச் முதல் வாரத்தில் சென்னையில் அனைத்து அரசு மருத்துவர்களும் சாகும் வரை பட்டினி இருக்கும் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு தலைவர் எஸ்.பெருமாள் பிள்ளை கூறுகையில், “மருத்துவர், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் பணியிடங்களை 2 மடங்காக அதிகரிக்க வேண்டும். முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354-ஐ அமல்படுத்த வேண்டும்.

கரோனா பேரிடர் காலத்தில் பணியின்போது உயிரிழந்த மருத்துவர் விவேகானந்தன் மனைவிக்கு அரசு வேலைக்கான ஆணை வழங்க வேண்டும். இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் இந்த அறிவிப்புகளை முதல்வர் வெளியிட வேண்டும்” என்று தெரிவித்தார்.

## கொலை செய்யப்பட்ட கனிமவள அதிகாரி வீட்டில் போலீஸ் பாதுகாப்பு - ‘அமானுஷ்யம்’ இருப்பதாக சமூக வலைதளங்களில் ரீல்ஸ்




**சென்னை, பிப்.18:** பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்யப்பட்ட கனிமவளத் துறை அதிகாரியின் வீட்டில் ‘அமானுஷ்யம்’ இருப்பதாக சமூக வலைதளங்களில் ரீல்ஸ் வெளியிடப்பட்டு வருகிறது. இதையடுத்து அந்த வீட்டுக்குள் யாரும் நுழையாதபடி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னை அசோக் நகர் நடேசன் நகரில் வசித்து வந்த ஓய்வுபெற்ற கனிமவளத் துறை அதிகாரி (டாமின் தலைவர்) சரவணன். அவரது மனைவி கஸ்தூரி, வீட்டு வேலைக்கார பெண் அன்புக்கரசி ஆகியோர் கடந்த 2008-ல் கொலை செய்யப்பட்டனர்.

சிபிசிஐடி போலீஸார் விசாரணை நடத்தி சரவணனின் கார் ஓட்டுநர் உட்பட 4 பேரை கைது செய்தனர். கொலை நடந்து 18 ஆண்டுகள் ஆன நிலையில் கனிமவளத் துறை அதிகாரி சரவணன், மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆருடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் வீட்டின் பொருட்கள் சிதறிக் கிடப்பதுடன், கார், வீடு, அனைத்தும் பாழடைந்த நிலையில் உள்ளன.

இதைக் கண்ட இளைஞர்கள் சிலர் அந்த வீட்டில் ‘அமானுஷ்யம்’ இருப்பதாகக் கூறி அத்துமீறி, வீட்டுக்குள் நுழைந்து ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி வருகிறது. இதையடுத்து, அந்த வீட்டின் முன்பு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வீட்டில் அத்துமீறி நுழைவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீஸ் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

## குப்பை சேகரிக்கும் பணியில் விசில் பயன்படுத்துக் கூடாது - மன்னர்குடி நகர்மன்றக் கூட்டத்தில் வலியுறுத்தல்



**சென்னை, பிப்.18:** நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் குப்பைகள் சேகரிக்கும் பணியில் ஈடுபடும்போது, விசில் பயன்படுத்தாமல், ஒலிபெருக்கியை பயன்படுத்த வேண்டும் என மன்னார்குடி நகர்மன்றக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மன்னார்குடி நகர்மன்றக் கூட்டம் தலைவர் த.சோழராஜன் (திமுக) தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசியது:

ஜெ. பாலமுருகன் (திமுக): பாரதிதாசன நகர் குளத்தில் நடைபாதை அமைக்கவும், அம்பலக்காரத் தெருவில் ஹரித்ராநதி தெப்பக்குள நீர் பாதை வாய்க்காலை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செ. பாரதிமோகன் (திமுக): விசில் ஒரு கட்சியின் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சிப் பகுதியில் குப்பை சேகரிக்கும் தூய்மைப் பணியாளர்கள் விசிலை பயன்படுத்தி ஒலி எழுப்புவதை தவிர்த்துவிட்டு, ஒலிபெருக்கியை பயன்படுத்த வேண்டும்.

கா. கலைவாணி (திமுக): ருக்மணிக்குளம் மேல்கரையில் மின் விளக்குகளையும், கே.கே. நகரில் வாய்க்கால் பால சுவர்களையும் சீரமைக்க வேண்டும்.

சா. புகழேந்தி (திமுக): நகராட்சி பூங்காக்கள் மேம்பாட்டுப் பணிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளை விரைந்து முடித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

த. சங்கர் (திமுக): செங்குளத்தை சுத்தம் செய்து, மின்விளக்கு வசதி ஏற்படுத்த வேண்டும்.

அ.திருச்செல்வி (அமமுக): புதைச்சாக்கடை திட்டம் நிறைவடைந்த பகுதிகளில் சாலை அமைப்பதற்கான பட்டியலில் பல பகுதிகள் இடம் பெறவில்லை. நகரின் கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் எரிவாயு தகன மேடையை பயன்படுத்த 5 கிமீ தூரம் செல்ல வேண்டியுள்ளதால், கீழப்பாலத்தில் எரிவாயு தகனமேடை அமைக்க வேண்டும்.

அ.செந்தில்செல்வி (அமமுக): வார்டு மாற்றப்பட்டு பணிக்கு வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய வழிக்காட்டுதல் இல்லாததால், சரிவர பணி செய்ய முடியாத நிலை உள்ளது.

தலைவர்: கரிம கழிவிலிருந்து பயோ கேஸ் எடுக்கும் கட்டமைப்புப் பணி நிறைவு பெற்றுள்ளது. பயோ கேஸ் மின்சாரமாக மாற்றப்பட்டு, நகராட்சி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முதல் கட்டமாக 4 வார்டுகளில் புதைசாக்கடைத் திட்டத்தில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக மேலும் 14 வார்டுகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது. ருக்மணிகுளம் மேல்புறத்தில் டான்சி நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தை நகராட்சி கிரையம் செய்து அவ்விடத்தில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.8.20 கோடியில் மின்னனு நூலகம் அமைக்கப்படவுள்ளது.

கூட்டத்தில், நகராட்சி ஆணையர் (பொ) போ.வி. சுரேந்தர்ஷா, மேலாளர் ஜெ. மீராமைதீன், பொறியாளர் எட்வின் ப்ண்ட ஜோஸ், நகர்நல அலுவலர் கண்ணதாசன், சுகாதார ஆய்வாளர் தமிழ்ச்செல்வன், உதவி வருவாய் அலுவலர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகத்தில் பிப்.21-ல் 10 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



**சென்னை, பிப்.18:** தென்மேற்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக வரும் பிப்ரவரி 21-ம் தேதி டெல்டா உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிவுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகளில் 18-ம் தேதி வாக்கில் மேலும் வலுப்பெறக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளையும் (பிப்.17), நாளை மறுதினமும் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

19-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 20 முதல் 22-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கனமழை வாய்ப்பு: 21-ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களிலும், 22-ம் தேதி தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் 19, 20 தேதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாசி அமாவாசை: முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபாடு



**ராமநாதபுரம், பிப்.18:** மாசி மாத மறைநிலா அமாவாசையை முன்னிட்டு ஆயிரக்கனக்கான மக்கள் தம்மோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்கு திதி கொடுத்து அக்னி தீர்த்தக் கடலில் நீராடி சுவாமி தரிசனம் செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் மாசி மகா சிவராத்திரி திருவிழா கடந்த 8 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக சிவராத்திரி, சுவாமி, அம்பாள் தேரோட்டம் நிறைவடைந்தது. இதனையடுத்து, இன்று மறைநில அமாவாசையை முன்னிட்டு பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கனக்கான பக்தர்கள் ராமேஸ்வரம் வருகை தந்தனர்.

தம்மோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்கு திதி மற்றும் தர்ப்பணம் கொடுத்து அக்னி தீர்த்தக் கடலில் நீராடினர்.

இதனைத் தொடர்ந்து, ராமநாதசுவாமி கோயிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் நீண்ட வரிசையில் நின்று நீராடினர். இதன் பின்னர் சுவாமி தரிசனம் செய்தனர்.

பக்தர்களின் வருகையை முன்னிட்டு இந்து சமய அறநிலைத்துறையினர் விரிவாக ஏற்பாடுகளை செய்திருந்தனர். கூடுதல் பாதுகாப்புப் பணியில் 200-க்கும் மேற்பட்ட போலீஸார் ஈடுபட்டனர்.

## சென்னை | திருமண மண்டபத்தில் உடை மாற்றிய பெண்களை ரகசியமாக வீடியோ எடுத்த இளைஞர் கைது



**சென்னை, பிப்.18:** தாழம்பூர், செம்மஞ்சேரி பகுதியைச் சேர்ந்த 50 வயது பெண் ஒருவர் சேத்துப்பட்டில் உள்ள திருமண மண்டபத்தில் கடந்த 14-ம் தேதி நடைபெற்ற உறவினரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

மறுநாள் காலை மண்டபத்தில் உள்ள குளியல் அறையில் உடைகளை மாற்றிக் கொண்டிருந்தார். அப்போது, ஜன்னல் வழியாக யாரோ வீடியோ எடுப்பது போல் தெரிந்தது. இதைக் கண்டு அப்பெண் கூச்சலிடவே, அந்த நபர் தப்பி ஓடினார்.

மண்டபத்தில் திரண்டிருந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடியோ எடுத்த இளைஞரை மடக்கிப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீஸாரின் விசாரணையில் பிடிபட்டவர் வேளச்சேரியைச் சேர்ந்த பிரபு(29) என்பதும், திருமணத்துக்கு அலங்காரம் செய்ய வந்த பெண்ணின் கணவர் என்பதும் தெரிந்தது. திருமண மண்டப குளியல் அறையில் பலமுறை இதேபோல் ரகசிய வீடியோ எடுத்தது தெரியவந்தது. பிரபுவை போலீஸார் கைது செய்தனர்.

# வடபழனியில் பிரபல வணிக வளாகத்தில் தீ




**சென்னை, பிப்.18:** வடபழனியில் திரையரங்கம், உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் பிரபலமான வணிக வளாகம் செயல்பட்டு வருகிறது. இந்த வணிக வளாகத்தின் முதல் தளத்தில் தனியார் உணவகம் செயல்படுகிறது.

நேற்று மதியம் 12 மணியளவில், இந்த உணவகத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. சமையல் அறையில் பற்றிய தீ, அடுத்த சில நிமிடங்களில் மளமளவென பரவியது.

தீ விபத்து ஏற்பட்டவுடன் வணிக வளாகத்தில் இருந்த தீயணைப்பு எச்சரிக்கை அலாரங்கள் ஒலித்தன. இதையடுத்து, உள்ளே இருந்த அனைவரும் அலறியடித்து வெளியேறினர்.

மற்ற தளங்களில் இருந்தவர்களையும் வணிக வளாக ஊழியர்கள் துரிதமாக வெளியேற்றினர். தீ விபத்து தொடர்பாக தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.


இதையடுத்து, வடபழனி, கோயம்பேடு மற்றும் அசோக் நகர் ஆகிய தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்களுடன் வீரர்கள் சம்பவ இடம் விரைந்து தீயை அணைத்தனர்.

சுமார் 30 நிமிடத்தில் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த விபத்தில் உணவகத்தில் இருந்த பெரும்பாலான பொருட்கள் சேதம் அடைந்தது.

அதிர்ஷ்டவசமாக யாருடைய உயிருக்கும் ஆபத்து ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# சிபிஐ வழக்கில் சாதகமான தீர்ப்பு பெற ரூ.50 லட்சம் பெற்றதாக குற்றம்சாட்டிய வழக்கறிஞர் சங்கம் போலியானது



**சென்னை, பிப்.18:** சிபிஐ பதிவு செய்துள்ள வழக்கில் தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி மூத்த வழக்கறிஞர் ரூ.50 லட்சம் பெற்றுள்ளதாக குற்றம் சாட்டிய வழக்கறிஞர் சங்கமே போலியானது எனக்கூறி உயர் நீதிமன்ற பதிவுத்துறைக்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008-09 காலகட்டத்தில் தங்க வர்த்தகத்தில் ஈடுபட்ட என்எஸ்சி போஸ் சாலையைச் சேர்ந்த கணேஷ் அகர்வால் மற்றும் அவரது தந்தை நரேஷ் பிரசாத் அகர்வால் ஆகியோர் ரூ.89.90 கோடி அளவுக்கு மோசடியில் ஈடுபட்டதாக சிபிஐ வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரி கணேஷ் அகர்வாலும், வழக்கை ரத்து செய்யக்கோரி நரேஷ் பிரசாத் அகர்வாலும் தொடர்ந்துள்ள மேல்முறையீட்டு வழக்கு நீதிபதி எம்.நிர்மல்குமார் முன்பாக நிலுவையில் இருந்தது.

இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்காக ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் ஒருவர் இந்த வழக்கில் சாதகமான உத்தரவைப் பெற்றுத்தருவதாகக்கூறி ரூ.50 லட்சம் வாங்கியதாக குற்றம் சாட்டி 'ஆல் இந்தியா லாயர்ஸ் அசோசியேஷன் ஃபார்ஜஸ்டிஸ்' என்ற வழக்கறிஞர் சங்கம் குற்றம் சாட்டி உயர் நீதிமன்ற பதிவுத் துறைக்கும், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறைக்கும் கடிதம் அனுப்பியிருந்தது.

அந்த கடிதம் எதிரொலியாக இந்த வழக்கு விசாரணையில் இருந்து விலகிய நீதிபதி எம்.நிர்மல்குமார் இது தொடர்பாக உயர் நீதிமன்ற ஊழல் தடுப்பு பிரிவு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். தன் மீதான குற்றச்சாட்டை பகிரங்கமாக மறுத்த சம்பந்தப்பட்ட மூத்த வழக்கறிஞரும் இதுதொடர்பான எந்த விசாரணைக்கும் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அந்த மூத்த வழக்கறிஞர் மீது குற்றம் சாட்டி கடிதம் அனுப்பிய வழக்கறிஞர் சங்கமே போலியானது எனக்கூறி நெல்லை பாளையங்கோட்டையை தலைமையிடமாகவும், வண்டலூரில் கிளையையும் கொண்டு இயங்கும் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் சார்பில், அதன் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்கறிஞர் யு.அதியமான் உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளருக்கு கடிதம் கொடுத்துள்ளார்.

அதில், "மூத்த வழக்கறிஞர் ஒருவர் மீது குற்றம் சாட்டி உயர் நீதிமன்ற பதிவுத்துறை மற்றும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், எங்களது அமைப்பின் பெயர் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எங்களது சங்கத்தின் சார்பில் இதுதொடர்பாக யார் மீதும் எந்த குற்றச்சாட்டும் சுமத்தி கடிதம் அனுப்பப்படவில்லை.

நீதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போல பாரிமுனை முகவரியில் எங்களது அமைப்புக்கு எந்த அலுவலகமும் இல்லை. செயலாளர் என்ற பதவியும் எங்களிடம் இல்லை.

எனவே எங்களது சங்கத்தின் பெயருக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதமாக அந்த போலி கடிதத்தை அனுப்பியவர்களையும், அதன் பின்னணியையும் கண்டறிந்து உரியநடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுதொடர்பாக காவல்துறையிலும் புகார் அளிக்கவுள்ளோம், என தெரிவித்துள்ளார்.

# கம்போடியா, மியான்மர் செல்வோருக்கு 'சைபர் ஸ்லேவரி' ஆபத்து: புலம்பெயர்ந்தோர் பாதுகாப்பு அதிகாரி ராஜ்குமார் எச்சரிக்கை



**சென்னை, பிப்.18:** "வேலைக்காகக் கம்போடியா, லாவோஸ் மற்றும் மியான்மர் போன்ற நாடுகளுக்குச் செல்லும் இந்திய இளைஞர்கள், 'சைபர் ஸ்லேவரி' எனப்படும் ஆபத்தான இணைய அடிமைத்தனத்தில் திட்டமிட்டுச் சிக்க வைக்கப்படுகிறார்கள்" என புலம்பெயர்ந்தோர் பாதுகாப்பு அலுவலர் ராஜ்குமார் எச்சரித்துள்ளார்.

சென்னை வெளிநாட்டுக்குச் செல்வோர் பாதுகாப்பு அதிகாரி அலுவலகம், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்தும், 'தமிழ்நாடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வேலை அளிப்போர் கூட்டாண்மை உச்சி மாநாடு' சென்னையில் நேற்று தொடங்கியது.

இதில் தமிழகம் முழுவதிலும் உள்ள தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 1,000 மாணவர்கள், சென்னையில் உள்ள தூதரக அதிகாரிகள், மத்திய-மாநில அரசு அலுவலர்கள், வேலை அளிப்போர் மற்றும் ஆள் சேர்ப்பு முகவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் புலம்பெயர்ந்தோர் பாதுகாப்பு அதிகாரி ராஜ்குமார் பேசியதாவது: வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இந்தியர்கள் பாதுகாப்பான வேலையைப் பெறுவதை நாங்கள் உறுதி செய்கிறோம்.

இந்தியாவில் 'இமிக்ரேஷன்' (Immigration) என்பது மிகவும் பிரபலம். ஆனால் 'எமிக்ரேஷன்' என்பது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்பவர்களைக் குறிக்கும். எங்கள் அலுவலகம் 1847-ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்டது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்ட்கள் மூலம் மட்டுமே வெளிநாடு செல்ல வேண்டும். இதை வலியுறுத்தவே கடந்த ஆண்டு 'பார்த்துப் போங்க' பிரச்சாரத்தைத் தொடங்கினோம்.

குறிப்பாக, கம்போடியா, லாவோஸ், மியான்மர் போன்ற நாடுகளில் படித்த இளைஞர்கள் 'சைபர் ஸ்லேவரி' எனப்படும் இணைய அடிமைத் தனததில் சிக்க வைக்கப்படுகிறார்கள்.

கஸ்டமர் கேர் வேலை என்று அழைத்துச் செல்லப்பட்டு, அவர்கள் மூலம் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். கடந்த ஓராண்டில் இந்தப் பிரச்சாரத்தின் மூலம் இத்தகைய பாதிப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளன. இப்போது 'பார்த்துப் போங்க 2.0' திட்டத்தைத் தொடங்குகிறோம்.

இதில் இன்ஸ்டாகிராமில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சாட்போட் மூலம் 'Hi' என்று மெசேஜ் செய்தாலே அனைத்துத் தகவல்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த மாநாட்டில், வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் சுரேந்தர் பகத், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு இணையவழி குற்றப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் ஷனாஸ் இலியாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பின்லாந்து வானிலை ஆய்வு மையத்துடன் ஒப்பந்தம் - சென்னை ஐஐடி மேற்கொண்டது




**சென்னை, பிப்.18:** காற்றின் தரம், வானிலை, காலநிலை மாற்றங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் வகையில் பின்லாந்து நாட்டின் வானிலை ஆய்வு மையத்துடன் இணைந்து 'வாயு' (VAYYU) என்ற மெய்நிகர் ஆராய்ச்சிமையத்தை சென்னை ஐஐடி தொடங்குகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. சென்னை ஐஐடி, பின்லாந்து வானிலை ஆய்வு மையத்துடன் இணைந்து 'வாயு' (VAYYU) என்ற அறிவு மையத்தை தொடங்க உள்ளது.

இது ஏரோசால் தூசிப் படலம் - வானிலை இயல் தொடர்புகள், இமயமலை வளிமண்டலம் - கிரையோஸ்பியர் அடுக்கு இடையிலான தொடர்புகள், நகர்ப்புற காற்று ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ளும் மெய்நிகர் ஆராய்ச்சி மையம் ஆகும்.

பிராந்திய நீர் - காலநிலை (Hydro - Climate), இமயமலையின் பனி, பனியாறு உருகுதல், இந்தியப் பெருநகரங்கள் உள்ளிட்ட பகுதிகளில் காற்றின் தரம் ஆகியவற்றின் மீது ஏரோசால்கள் (Aerosols) எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நன்கு புரிந்துகொள்ள இந்த மையம் உதவியாக இருக்கும்.

மிக முக்கியத்துறை: சென்னை ஐஐடியின் ஆராய்ச்சித் துறை டீன் சாந்தி பவன், ஐசிஎஸ்ஆர் டீன் மனு சந்தானம், 'வாயு' ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் சந்தன் சாரங்கி, பின்லாந்து வானிலை ஆய்வு மையத்தின் தலைமைப் பொறுப்புகளில் உள்ள பேராசிரியர் பெட்டேரி தாலஸ், பேராசிரியர் ஹன்னெல் கோர்ஹனன், டாக்டர் ராகேஷ் கே.ஹூடா ஆகியோர் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதுகுறித்து சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி கூறியபோது, "காலநிலை மாற்றம் மற்றும் கண்காணிப்பு உலகளாவிய தளத்தில் ஆராயப்பட வேண்டிய மிக முக்கியமான துறையாகும்.

இந்த மிக முக்கியமான ஆராய்ச்சியில், பின்லாந்து வானிலை ஆய்வு மையத்துடன் இணைந்து பணியாற்றுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.

# அஜித்குமார் மரண வழக்கை 6 மாதத்தில் முடிக்க வேண்டும்

**மதுரை, பிப்.18:** மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் காவல் மரண வழக்கு விசாரணையை 6 மாதங்களில் முடிக்கவும், டிஎஸ்பி உட்பட 4 பேரை கைது செய்து விசாரிக்கவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளி அஜித்குமார். இவரை கடந்த ஆண்டு ஜூன் 27-ல் நிகிதா என்பவர் அளித்த நகை திருட்டு புகார் தொடர்பாக தனிப்படை காவலர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணையின்போது, தனிப் படை காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். தனிப்படை காவலர்கள் கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர் விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டது.

சிபிஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் தனிப்படை வேன் ஓட்டுநர் ராமச்சந்திரன், மானாமதுரை சரக டிஎஸ்பியாக இருந்த சண்முகசுந்தரம், திருப்புவனம் ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளைய ராஜா ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்பட்டன. டிஎஸ்பி உட்பட 4 பேரும் பிப். 25-ல் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் தனிப்படை காவலர்கள் கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகியோர் ஜாமீன் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் நீதிபதி எஸ்.ஸ்ரீமதி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.


அஜித்குமாரை தனிப்படை காவலர்கள் தான் அடித்துக் கொலை செய்துள்ளனர் என்பதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன. எனவே, தனிப்படை காவலர்களுக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என்று கோரினார்.

உயர் அதிகாரி உத்தரவிட்டால் ஒருவரை அடித்துக் கொலை செய்வார்களா? அடிக்க முடியாது என அதிகாரியிடம் காவலர்கள் சொல்ல மறுப்பது ஏன்? உங்கள் மீது உயர் அதிகாரி நடவடிக்கை எடுத்தால் நீதிமன்றம் வாருங்கள். நீதிமன்றம் உங்களை பாதுகாக்கும்.டிஎஸ்பிக்கு உத்தரவிட்ட அதிகாரி யார் என்பதை கண்டு பிடிக்க முடியாததால், உத்தரவிட்ட அதிகாரி பாதுகாக்கப்பட்டு வருவது தெரிகிறது.

இந்த வழக்கை விசாரணை நீதிமன்றம் 6 மாதங்களில் முடிக்க வேண்டும். தேவைப்பட்டால் குற்றப் பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டு இன்னும் கைது செய்யப்படாமல் இருக்கும் டிஎஸ்பி உட்பட காவல்துறை அதிகாரிகள் 4 பேரையும் கைது செய்து விசாரிக்கலாம். ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என உத்தரவிட்டார்.

## அரசியல் கார்னர்

# 'அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சமென்ப தில்லையே' - பாரதியார் வரிகளை பதிவிட்ட மாணிக்கம்தாகூர்





**மதுரை, பிப்.18:** மதுரையில் நடந்த காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர், "எங்கள் பலம் இல்லாமல் நீங்கள் (திமுக) அரியணையில் ஏறி இருக்க முடியாது என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் செய்ததையும் நாங்கள் மறக்கவில்லை. தோழமையாக இருக்கும்போது நாங்கள் கேட்பது என்னவென்றால், நாங்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கிறோம். நீங்களும் எங்களுக்கு அதே மரியாதையை கொடுக்க வேண்டும் என்பதுதான். எங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையென்றால் திருப்பி அடிப்போம்" என்று தெரிவித்து இருந்தார்.

மாணிக்கம் தாகூரின் பேச்சு தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

'அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சமென்ப தில்லையே' என்ற பாரதியாரின் வரிகளை குறிப்பிட்டு பதிவிட்டுள்ளார்.

கூட்டணிக்குள் ஏற்பட்ட சலசலப்பு குறித்து அறிக்கை வழங்கியதாக செல்வப்பெருந்தகை பேட்டி அளித்த நிலையில் மாணிக்கம் தாகூர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

# பல முக்கிய அம்சங்களுடன் தயார்... 27-ந்தேதி வெளியாகும் த.வெ.க. தேர்தல் அறிக்கை?



**சென்னை, பிப்.18:** சட்டசபை தேர்தலை சந்திக்க த.வெ.க. முழுவீச்சில் தயாராகி வருகிறது. இதையொட்டி தேர்தல் அறிக்கை தயார் செய்யும் பணியில் தற்போது த.வெ.க. ஈடுபட்டுள்ளது. இதற்காக மாநில நிர்வாகிகளை கொண்ட குழுவும் அறிவிக்கப்பட்டது. பொது மக்கள் கருத்து தெரிவிக்க புதிய இணையதளமும் தொடங்கப்பட்டது.

தேர்தல் அறிக்கை குழுவுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்து வருகிறது. இணையதளத்திலும் பலரும் தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த கருத்துகளை தேர்தல் அறிக்கையில் இணைக்கும் பணியை தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் செய்து வருகின்றனர்.

கடந்த கால தேர்தல்களிலும், தற்போதும், தி.மு.க., அ.தி.மு.க.. தேர்தல் அறிக்கைகளில் இலவசங்கள் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், த.வெ.க தேர்தல் அறிக்கையில் இலவசங்கள் இடம் பெறுமா? அல்லது இலவசங்கள் இல்லாத மாற்று திட்டங்கள் இடம் பெறுமா? என்பது மிகுந்த எதிர்பார்ப்புமிக்கதாக மாறியுள்ளது.

இந்தநிலையில் த.வெ.க. தேர்தல் அறிக்கை பொதுமக்கள் விரும்பும் வகையில் பல முக்கிய அம்சங்களுடன் வருகிற 27-ந்தேதி வெளியாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தேர்தல் அறிக்கையை மக்கள் மத்தியில் வெளியிடுவதா? அல்லது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் வெளியிடுவதா? என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, பொள்ளாச்சி, வேலூரில் அடுத்தடுத்து மக்கள் சந்திப்பு கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்காக போலீஸ் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக த.வெ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# அதிமுக இரட்டை இலை சின்னம் விவகாரம்: தாமதம் குறித்து தேர்தல் ஆணையத்துக்கு டெல்லி ஐகோர்ட் கேள்வி

**புதுடெல்லி, பிப்.18:** அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் வழங்கியது, கட்சியின் கொடி, பெயரை பயன்படுத்துவது தொடர்பாக வி. புகழேந்தி அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்க ஏன் தாமதம்? என தேர்தல் ஆணையத்துக்கு டெல்லி உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் வழங்கியது, கட்சியின் கொடி, பெயரை பயன்படுத்துவது தொடர்பாக வி. புகழேந்தி அளித்த புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க டெல்லி உயர் நீதிமன்றம் கடந்த 2024ம் ஆண்டு இறுதியில் உத்தரவிட்டது.

அதன் பிறகு புகார் மனு மீது நடவடிக்கை இல்லை என்று குறிப்பிட்டு தேர்தல் ஆணையத்துக்கு எதிராக புகழேந்தி தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி சச்சின் தத்தா விசாரித்தார். புகார் மீது இரண்டு ஆண்டுகள் கடந்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை இல்லை. தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. என அவரது வழக்கறிஞர் திருமூர்த்தி வாதிட்டார்.

அப்போது தேர்தல் ஆணையத்திடம், புகார் மனு மீது செப்டம்பர் 14ம் தேதிக்கு பிறகு அழைத்து விசாரணை நடத்தினார்களா ? இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ? எப்போது விசாரித்து தீர்வு காணப்படும் ? உயர் நீதிமன்ற உத்தரவுக்கு பிறகும் நடவடிக்கை எடுக்க ஏன் தாமதம் ? என நீதிபதி கேள்விகளை எழுப்பினார்.

எஸ்ஐஆர் நடவடிக்கைகள் இருப்பதால், சரியான காலத்தை தெரிவிக்க முடியாது, இருப்பினும், இந்த விவகாரத்தில் விளக்கம் கேட்டு தெரிவிக்க அவகாசம் தேவை என தேர்தல் ஆணையத்தின் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையேற்ற நீதிபதி , இரட்டை இலை சின்ன விவகாரத்தில் புகார் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து பதில் அளிக்க தேர்தல் ஆணைய வழக்கறிஞருக்கு அவகாசம் வழங்கி விசாரணையை பிப்ரவரி 23ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com